# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி - 07 24 - 08 - 2003 ஞாயிற்றுக்கிழமை ஓசை 187



தொழில் நுட்பத்தில் ஒருமனி
நோத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்

Jaffna Road,
Kilinochchi.

யாழ் சாலை,
(சி-8437) கிளிநொச்சி.


## சிறிலங்கா அரசின் வரைவுக்குப் பதிலாக

# எமது மக்களின் அபிலாசைகளை உள்ளடக்கிய ஒரு வரைவை கையளிக்க தலைமை முடிவெடுத்துள்ளது

### பாரிசில் செய்தியாளரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

**சிறிலங்கா அரசாங்கம் ஏற்கனவே ஓர் இடைக்கால நிர்வாக வரைவை எங்களிடம் சமர்ப்பித்துள்ளது. அவர்கள் தந்த இந்த வரைவை பரிசீலித்து எமது மக்களுடைய நலன்கள், அபிலாசைகள் உள்ளடக்கிய ஒரு வரைவை உருவாக்கி கையளிப்பதென எமது தலைமை முடிவெடுத்திருக்கிறது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று ஆரம்பமாகிய ஆலோசனைக் கூட்டத்திற்குமுன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்; இடைக்கால நிர்வாகமொன்றை அதாவது வடக்கு-கிழக்கில் வாழும் அனைத்து மக்களும் அனுபவிக்கக் கூடிய, அதிகாரங்களை உள்ளடக்கிய ஒரு நிர்வாக அலகை, ஒரு வரைவை உருவாக்குவது தான் எங்கள் முக்கிய நோக்கம்..அரசாங்கம் முன்வைத்த வரைவில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருக்கிறது. மேலதிக அதிகாரங்கள் உள்ளடக்கப்பட வேண்டியிருக்கிறது. இவை சம்பந்தமாக பாரிசில் கூடியிருக்கும் குழு பரிசீலித்து இவைகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒருமுழுமையான அதிகாரக் கட்டமைப்பைக் கொண்டதோர் நிர்வாக அலகை நாங்கள் சமர்ப்பிக்க விருக்கின்றோம என அவர் கூறினார்.

நேற்றுக் காலை ஐரோப்பிய நேரம் 10. மணிக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையில் இந்தக் கூட்டம் ஆரம்பமாகியது. இந்தக் கூட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சர்வதேச ஊடகங்கள் கேட்ட கேள்விகளுக்கும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரன் பண்டாரவன்னியனின் 200ஆவது ஆண்டு விழா நாளை

(அலுவலக செய்தியாளர்)

வன்னியின் கடைசி மன்னனான மாவீரன் பண்டாரவன்னியனின் 200ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நாளை கற்சிலைமடுவிலும் முள்ளியவளையிலும் நடைபெறவுள்ளன.மேற்படி நிகழ்வு காலை 10 மணிக்கு கற்சிலைமடுவில அமைந்துள்ள பண்டாரவன்னியன் உருவச்சிலையடியில் நடைபெறும் இரவு ஏழு மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் சுந்தரலிங்கம் கலையரங்கில் பண்டார வன்னியன் "குருவிச்சி நாச்சியார்" நூல் வெளியீடு, சிறப்புச் சொற்பொழிவுகள், ஆய்வுரைகள் என்பவற்றைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மாவீரன் பண்டாரவன்னியன் அறங்காவற்கழகம் தெரிவித்துள்ளது. (05)

## இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக வட,கிழக்கில் சிஹல உறுமய பிரச்சாரம்

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபையினை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துவருகின்ற நடவடிக்கைகளுக்கு எதிராக சிஹல உறுமய கட்சி வடக்கு-கிழக்கில் பிரச்சாரங்களில் ஈடுபடவிருப்பதாக அந்தக் கட்சியின் அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார். அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையினை வழங்குவதனை அனுமதிக்க முடியாது எனவும் இதனால வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற சிங்கள மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் அந்தக் கட்சி கூறியிருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் தங்களது பிரச்சார நடவடிக்கைகள் நடைபெறவுள்ளதாக சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டிருக்கின்றார்.

## -ஊறணியில் முகாமிட்டுள்ள அதிரடிப்படையினர்-

## பொது மக்களின் காணிகளை விலைக்குத் தருமாறு வற்புறுத்து

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொத்துவில்-அக்கரைப்பற்று பிரதான வீதியில் அமைந்துள்ள ஊறணி கனகர்கிராமத்தில் விசேட அதிரடிப் படையினர் தற்போது முகாம் அமைத்திருக்கும் 18 பொதுமக்களின் குடியிருப்புக் காணிகளை ஏக்கர் காணியை நான்கு லட்சம் ரூபா வீதம் வாங்குவதற்கு விலை பேசியுள்ளனர்.இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள் தாங்கள் 1990 ஆம் ஆண்டு முதல் இடம் பெயர்ந்து உறவினர் வீடுகளிலும், அகதிமுகாம்களில் வாழ்ந்து வருவதாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்து ஒன்றரை வருடங்கள் ஆகியும் இதுவரையில் தங்கள் காணிகளை விட்டு படையினர் அகலவில்லை, மாறாக தங்கள் காணிகளை பலாத்காரமாக விலைபேசி விற்பதற்கு வற்புறுத்துவதாகவும் அருகில் உள்ள பற்றைக்காடுகளை துப்புரவுசெய்து அதில் தங்களை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் ஒரு போர் வெடித்தால் புலிகளை வெற்றிகொள்வது கடினம்

### சனாதிபதியின் ஆலோசகர் கதிர்காமர்

சிறிலங்காவில் வெளிநாடுகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. இதற்கு ஆளும் அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் சனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வெளிநாட்டு செய்தியாளர் சங்கத்தில் உரையாற்றிய போது அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது, சிறிலங்கா விவகாரத்தில் முடிவெடுக்கும் அளவிற்கு நோர்வே, ஜப்பான் போன்ற நாடுகள் செயற்பட்டு வருகின்றன. இது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

மீண்டுமொரு போர் ஏற்பட்டால் விடுதலைப் புலிகளை அடக்குவதற்கு சர்வதேச அரசுகளின் அங்கீகாரத்தைப் பெற்று வருவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளமை கண்டனத்திற்குரியது.விடுதலைப்புலிகள் மிகவும் பலமாக உள்ளனர். மீண்டும் ஒரு போர் ஏற்பட்டால் அவர்களை வெற்றி கொள்வது கடினமாகும். திருகோணமலையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தியாவின் எண்ணெய்க் குதங்களுக்கு விடுதலைப் புலிகளால் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## உந்துருளியில் சென்ற தம்பதியினரை மோதிவிட்டு மறைந்த ராணுவ வாகனம்

உந்துருளியில் வந்துகொண்டிருந்த இருவரை மோதிய இராணுவப் பேருந்தொன்று அவர்களை அப்படியே விட்டுவிட்டு ஓடிவிட்டது. நேற்று மாலை திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது இரண்டாம் கட்டை, மன்னார் வீதி, வேட்டங்குளம்,வவுனியாவைச் சேர்ந்த எஸ்.சதானந்தன் (வயது-32) என்பவரும் அவருடைய மனைவியான 30 வயதுடைய ச.வதனி என்ற இருவருமே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேற்படி சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது.

திருநெல்வேலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி உந்துருளியில் சென்று கொண்டிருந்த இருவரையும் பலாலியிலிருந்து இராணுவத்தினரை ஏற்றிக் கொண்டு சென்ற பேருந்தொன்று முந்திக்கொண்டு செல்ல முற்பட்ட வேளை மோதியதால் மிகவும் பலத்த காயங்களுடன் இவ்விருவரும் மக்களால் யாழ்போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.மேற்படி சம்பவத்தில் காயமடைந்த பெண் நிறைமாதக் கர்ப்பிணி என்பது குறிப்பிடத்தக்கது. (33)

## சமாதான முயற்சிகள் தொடர்பாக ஐ.தே.க.உறுப்பினர்களுக்கு கருத்தரங்கு

### ரணிலின் பணிப்பில் ஏற்பாடு

அரசாங்கம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சி தொடர்பாகவும் சமாதான முயற்சியின் அவசியம் குறித்து விளக்குவதற்காகவும் ஐக்கிய தேசியக் கட்சி தனது உறுப்பினர்களுக்கு கருத்தரங்குகளை நடத்த ஆரம்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்களுக்கான கருத்த ரங்கு நேற்று பேருவளையிலுள்ள விடுதியொன்றில் ஆரம்பமானது. இது இன்றும் தொடர்ந்து இடம் பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ்,ராஜித சேனாரட்ன உட்பட பலரும் கலந்து கொண்டுள்ளார்கள்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்களுக்கு உள்ள சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவதற்காக இந்தக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இரவுநேரத் தேடுதலில் 56 பேர்கைது

சிறிலங்கா தலைநகர் கொழும்பில் சிறிலங்காப் பொலிசார் மேற்கொண்டுள்ள சுற்றிவளைப்புத் தேடுதலின் போது 57பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். நேற்று முன்தினம் மாலை ஆறு மணிமுதல் நேற்றுக் காலை ஆறு மணிவரை இத்தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பொங்குதமிழ் ஏற்பாட்டு நிகழ்வில் கலந்துகொண்ட அரச ஊழியரிடம் இராணுவம் விளக்கம் கோருகிறது

வவுனியாவில் நடைபெற்ற பொங்குதமிழ் ஏற்பாட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அரசாங்க ஊழியர்களிடம் சிறிலங்கா இராணுவம் விளக்கம் கோரியுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கான ஏற்பாட்டுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது. இதில்கலந்து கொண்ட அரசாங்க ஊழியர்களிடமே சிறிலங்கா இராணுவம் விளக்கம் கோரியுள்ளது. இந்த விளக்கத்தை குறிப்பிட்ட ஊழியர்களின் திணைக்களத் தலைவர்களினூடாக எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் இது குறித்து முறைப்பாடுகள் செய்துள்ளனர். இது அரச ஊழியர்களின் அடிப்படை மனித உரிமை மீறல் எனக் குறிப்பிட்ட அவர்கள் இந்த உத்தரவை மீளப்பெற சிறிலங்கா இராணுவத்திடம் கண்காணிப்புக் குழுவினர் கேட்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.சிறிலங்கா இராணுவத்தின் இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரியுள்ளனர்.

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

சிவஞானம் இலட்சுமி என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 305951684V 07-08-2003 அன்று பளை தடுப்பு முகாமுக்கும் வட்டக் கச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து இதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (3659)

## சம்பளம் வழங்கல்

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்களின் ஆடி, ஆவணி மாதச் சம்பளம் வரும் 26ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரையும், ரம்யா மைதிலியில் வைத்து வழங்கப்படும் அத்துடன் கோரன் கட்டுப்பிள்ளையார் கோவில் புனரமைப்புக் கூட்டம் திரு நெறிக்கழக மண்டபத்தில் ஜி. ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் என தொழில் முகாமையாளர் அறியத் தருகிறார்.

## அடுத்து உள்ளூராட்சித் தேர்தலில்

# தனித்துப் போட்டியிடுவது குறித்து லங்கா சமசமாஜக் கட்சி ஆராய்வு

அடுத்த உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து வருவதாக லங்கா சமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

இக்கட்சியின் செயலாளர் பட்டி வீரக்கோன் கருத்துத் தெரிவிக்கையில் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதிலும் பார்க்கத் தனித்துப் போட்டியிடுவதால் கூடுதல் வாய்ப்புக்கள் உண்டு என்று தாங்கள் நம்புவதாகக் கூறினார். எனினும் இது சம்பந்தமான இறுதித் தீர்மானம் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் பேசிய பின்னர் எடுக்கப்படும் என்றும் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார். பொதுசன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்வதால் தேர்தல் பிரச்சாரத்தின் போது முன்னணியின் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பின்னடைவுகள் ஏற்படலாம் என்று நம்பப்படுவதாக வீரக்கோன் தெரிவித்தார். தனித்துப் போட்டியிடுவதன் மூலம் கூட்டுக் கட்சிகள் வாக்காளர்களின் ஆதரவைக் கூடுதலாகப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் உண்டென்று அவர் மேலும் கூறினார்.

ஒவ்வொரு கட்சியும் தங்கள் பொருளாதாரக் கொள்கைகளை மக்கள் முன்வைப்பதற்குத் தனித்துப் போட்டியிடுவதால் கூடுதல் வாய்ப்புக்கள் உண்டென்றும், பல கட்சிகள் இணைந்துள்ள பொதுசன ஐக்கிய முன்னணியினால் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு மாற்றுக் கொள்கை ஒன்றை முன்வைக்க முடியாதிருக்கிறது என்றும் பட்டி வீரக்கோன் கூறினார்.

## தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பம்

தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அடுத்த மாதம் 5ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் 6-ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 7-ம் திகதி காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 8-ம் திகதி காலை 8.30 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

## பெருமளவு மக்கள் சிரமதானப் பணி

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று முன்தினம் சிரமதானப் பணிகள் நூற்றுக்கணக்கான பொது மக்களால் மேற்கொள்ளப் பட்டன.

வலிகாமம் மேற்கு பிரதேசசபை ஊழியர்கள், சங்கானை பனை-தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க ஊழியர்,சங்கானை ப.நோ.கூ.ச. பணியாளர்கள், சுழிபுரம் மேற்கு கிராம மக்கள் கலந்து கொண்ட சிரமதானப் பணி மூலம், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல புனரமைப்புப் பணிகள் துரிதமாக் கப்பட்டுள்ளன.

## வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சிப் பிரதேச தமிழீழ காவல் பணிமனையினர் தற்போது அப்பிரதேசங்களில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையினைத் தீவிரப்படுத்தி வருவதாகத் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு 11மணியளவில் வெலிக்கண்டல் பகுதியில் மேற்படி கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையினை மேற்கொண்ட காவல் துறையினர் 10 போத்தல் கசிப்பினை கைப்பற்றியதுடன் சந்தேக நபரையும் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியதுடன் சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட கசிப்பினையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (சோ)

## ஏ-9 பிரதான வீதியில் பாலம் புனரமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிக்கும் பரந்தனுக்கும் இடையில் ஏ-9 பிரதான வீதியில்



சேதமுற்றிருந்த பாலத்தின் புனரமைப்பு வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இப்பாலமானது உடைந்து சேதமுற்ற நிலையில் இருந்தமையின் காரணமாக இப்பாலத்தின் ஊடாக ஏற்கனவே பயணித்த சகல வாகனங்களும் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டதுடன் சில வாகனங்கள் குடைசாய்ந்து பலத்த சேதத்திற்குள்ளானமையும் குறிப்பிடத்தக்கது. (சோ)

## பொ.ஐ.மு.செய்தியாளர் மாநாட்டிலிருந்து வெளிநாட்டு செய்தியாளர் வெளிநடப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளா மாநாட்டில் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் திடீர் வெளிநடப்புச் செய்தனர்.

செய்தியாளர் மாநாட்டின் ஆரம்பம் முதலே சிங்கள மொழியில் உரையாற்றிய பொ.ஐ.மு. பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சரத் அமுனுகம ஒரு மணிநேரம் கடந்த பினும் ஆங்கிலத்தில் எதுவித கருத்துக்களையும் தெரிவிக்காமல் இருந்ததை வெளிநாட்டுச் செய்தியாளர்கள் ஆட்சேபித்தனர். இதனையடுத்து சரத் அமுனுகம தான் பேசிக்கொண்டிருக்கும் போது, தனக்கு உத்தரவிட உங்களால் முடியாது எனக் கூறி முரண்பட்ட போது வெளிநாட்டுச் செய்தியாளர்களில் ஒரு பகுதியினர் வெளிநடப்புச் செய்தனர்.

## ஊரக தேசிய எழுச்சிப்பேரவை துணுக்காய் பிரதேசத்தில் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய் பிரதேசத்தில் தென்னியங்குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட கிராம சேகவர் பிரிவில் மேற்படி தெரிவு இடம் பெற்றுவருகின்றது. இதேபோன்று கடந்த 21ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு தென்னியங்குளம் கிராம சேவையாளர் து.மரியதாஸ் தலைமையில் தென்னியங்குளம் அ.த.க. பாடசாலைமண்டபத்தில் இடம்பெற்றது. இதேபோன்று அம்பலப் பெருமாள்குளம் பகுதியில் அப்பகுதி கிராமசேவையாளர் வீ.இராசரத்தினம் தலைமையில் விக்கினா படிப்பகத்தில் இரவு ஏழு மணியளவில் இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வுகளில் அரசியல் துறையைச் சேர்ந்த நா. இசைப் பிரியன் அரசியல் துறையைச் சேர்ந்த பெ. தனம் ஆகியோர் ஊரக தேசியஎழுச்சிப் பேரவை தொடர்பான கருத்துரைகளை வழங்கியதோடு ஊரக தேசிய எழுச்சிப் பேரவைத்தெரிவும் இடம்பெற்றது.(பா)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

பாண்டியன்குளம் பகுதியில் இரு தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அம்பலவாணர் மாணிக்கசிங்கம் (510533810V) கருங்காலி, காரைநகர், நாகன் கிருஷ்ணன் (311620240V)14, பெரிய புலோலி, சுழிபுரம் ஆகியோருடைய அடையாள அட்டைகளே கண்டெடுக்கப்பட்டன.

உரியவர்கள் யாழ்.சாலை கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் அலுவக நேரங்களில் பெற்றுக்கொள்ளவும். (பா)

## வீதியால் செல்லும் பெண்கள் மீது சிறிலங்கா படையினர் அடாவடி

(யாழ்ப்பாணம்)

நடுக்குடத்தனையில் இருந்து குடத்தனை வடக்கு நோக்கி செல்லும் வீதியில் நிலை கொண்டுள்ள படையினர் அவ்வீதியூடாகச் செல்லும் பெண்கள் மீது சேட்டை புரிந்து வருகின்றனர்.

அப்பகுதியின் சவுக்கம் தோட்டப் பகுதியில் அமைந்துள்ள காவலரண்களில் இருந்தே படையினர் மேற்படி அடாவடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவிலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் முறையிடப்பட்டுள்ளது. (33)

## காலாவதியான உணவுப் பொருள் விற்பனை குறித்து எச்சரிக்கை

மனிதப்பாவனைக்குப் பயன்படுத்த முடியாத பொதியாக்கப்பட்ட தரமற்ற, பதனிழந்த உணவு வகைகளான குழுக் கோலஸ்,பனங் கட்டி, பிஸ்கட் வகைகள், கேக், தேயிலை, பழரசம், மென்பானம் என்பன தென்னிலங்கை. எமது பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்படுவது உணவுப் பரிசோதனை மூலம் அறிய முடிகின்றது. எனவே மேற்படி உணவுப் பொருட்கள் மனித னுக்கு ஊறு விளைவிக்கக் கூடியதாகும்.உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் நுகர்வோர் இவ்விடயங்களை அவதானித்து கொள்வனவு செய்வதுடன் இம்மனிதப் பாவனைக்கு ஊறு விளைவிக்கும் உணவுப் பொருட்கள் விற்பனை மேற்கொள்ளும் விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மனவருத்தத்துடன் தமிழீழ சுகாதார சேவையினர் அறியத்தருகின்றனர்.

## ‘நியாப்’ திட்டத்தின் கீழ் சின்னப் பூவரசங்குளம் திருத்தம்

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக் குறு இராணுவ நடவடிக்கை மூலம் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ள சின்னப் பூவரசங்குளம் தற்போது நியாப் திட்டத்தின் கீழ்ப் புனரமைக்கப் பட்டு வருகிறது.

கடந்த 1997 ஆம் ஆண்டு படையினர் சின்னப் பூவரசங் குளம் பகுதியை ஆக்கிரமித்து குளத்தின் அணைக்கட்டுகளில் காப்பரண்களையும் பதுங்கு குழிகளையும் அமைத்திருந்தனர். படையினரின் மேற்படி நடவடிக்கையால் குளத்தில் நீர் தேக்கி வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் குளத்தின் அணைக்கட்டுக்களும் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது. அத்துடன் குளத்துக்கு நீர் வழங்கும் காட்டாறு தூர்ந்துள்ளதால் குளத்துக்கான முழுமையான நீரும் வந்து சேரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்பகுதியில் உள்ள சுமார் 100 ஏக்கருக்கு மேற்பட்ட நெல்வயல்களில் செய்கை பண்ணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் இப்பகுதி விவசாயிகளும் பாதிப்படைந் துள்ளனர்.

விவசாயிகளின் இந்நிலை யைக் கருத்திற் கொண்டு மேற்படி குளம் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகிறது. (லோ)

## - தமிழீழப்பாடல் ஒலிபரப்பியதற்காக -

## ஐஸ்பழ வியாபாரி ஒருவருக்கு கோப்பாயில் படையினர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் கோப்பாய் பகுதியில் சைக்கிளில் ஐஸ்பழம் விற்றுக் கொண்டிருந்த ஐஸ்பழ வியாபாரி ஒருவர் சிறிலங்காப் பொலிசாரால் எச்சரிக்கப்பட்டதுடன் அவரது ஐஸ்பழங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது நேற்றுக் காலை 10 மணியளவில் கோப்பாய் பகுதியில் தமிழீழ புரட்சிப்பாடல்களை ஒலிக்க விட்டுக்கொண்டு ஒருவர் ஐஸ்பழ விற்பனையில் ஈடுபட்டுள்ளார். பாடல் ஒலிபரப்புவதை நிறுத்துமாறு பொலிசார் உத்தரவிட்டுள்ளனர் அதற்கு அவர் மறுப்புத் தெரிவிக்கவே பொலிசார் மேற்படி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இதனால் ஐஸ்பழங்களை விற்கமுடியாத நிலை ஏற்பட்டது.

இதனைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அறிவித்தால் தான் மீண்டும் தொழில் செய்ய முடியாது எனவும் பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார். (33)

## கிளிநொச்சி சந்தைப்பகுதியில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சந்தைப்பகுதியில் மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

மேற்படி மலேரியா மற்றும் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கிளிநொச்சி நகரச் சந்தைப்பகுதியில் இரு தினங்கள் இந்நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

இந்தப்பகுதியில் காணப்படுகின்ற பொலித்தீன் பைகள் மற்றும் நீர்தேங்கக் கூடிய கழிவுப் பொருட்கள் அகற்றப் பட்டு சுகாதார விழிப்புணர்வு தொடர்பான முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (பா)

## வவு.பாடசாலைகளில் சூழல் முன்னோடிக் குழுக்கள்

(வவுனியா செய்தியாளர்)


வவுனியா மாவட்ட பாடசாலைகளில் சூழல் முன்னோடிக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையின் அனுசரணையுடன் சூழல் பாதுகாப்பினை நோக்காகக் கொண்டு வவுனியா மாவட்ட பாடசாலைகளில் பாடசாலை மட்டத்தில் சூழல் முன்னோடிக் குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தரம்-7இல் கல்வி கற்கும் சகல மாணவர்களையும் உள்ளடக்கியதாக பாடசாலையில் பல குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் 25 மாணவர்கள் அங்கம் வகிப்பர். (10)

# ஈராக்கில் தாக்குதல் நடத்துவோரில் சிலர் சவூதி எல்லைக்கு ஊடாகவே பிரவேசிக்கின்றனர்

## - அமெ. பிரதி ராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ் குற்றச்சாட்டு



**ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராகத் தாக்குதலை நடத்திவருவோரில் சிலர் சவூதி அரேபிய எல்லைக்கூடாக ஈராக்கினுள் பிரவேசிக்கின்றார்கள் என அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ் நேற்று முன்தினம் தொலைக்காட்சி பேட்டி ஒன்றின் போது குற்றம் சாட்டியுள்ளார்.**

கடந்த ஏப்ரல் மாதம் சதாமை பதவியிலிருந்து கவிழ்த்த யுத்தத்திற்குப் பின்னர் தினமும் ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கத் துருப்புகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தாக்குதலின் உச்சக் கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமை ஐநா. செயலகம் மீது இடம்பெற்ற தாக்குதல் உள்ளது என ஆர்மிரேஜ் கூறியுள்ளார்.

தாக்குதல் நடத்துவோரில் சிலர் ஈரான், சிரியா ஆகிய நாடுகளின் ஊடாக ஈராக்கில் பிரவேசிப்பதாக இதுவரை தெரிவித்துவந்த அமெரிக்க அதிகாரிகள், அமெரிக்காவின் முக்கிய நட்புநாடுகளில் ஒன்றான சவூதி அரேபியாவையும் தற்போது இக்குற்றச்சாட்டிற்கு உட்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மொன்ரோவியாவுக்கண்மையில் விளையாட்டு மைதானம் ஒன்றில் குடியமர்த்தப்பட்டிருக்கும் அகதிச் சிறுவர்கள். பாத்திரங்களில் தண்ணீரைக் கொண்டு செல்கின்றனர்.

## பிரேசில் அனுப்பவிருந்த மற்றொரு ரொக்கெட் சிதறியது

பிரேசில் அடுத்த சில நாட்களில் விண்வெளிக்கு அனுப்பவிருந்த ரொக்கெட் ஒன்று நேற்று முன்தினம் வெடித்துள்ளது.

இச்சம்பவத்தின் போது 21 விஞ்ஞானிகள் உயிரிழந்துள்ளனர். இவ் ரொக்கெட் அடுத்த வாரம் விண்ணில் செலுத்துவதற்கு தயார் நிலையில் இருந்தது. இதற்கான இறுதிக் கட்ட சோதனை நேற்று முன்தினம் நடத்தப்பட்ட போதே இது வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் பிரேசிலின் மூன்றாவது விண்வெளி ஆய்வுத்திட்டமும் தோல்வியில் முடிவடைந்துள்ளது. 65 லட்சம் டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட 65 அடி நீளமான இவ் ரொக்கெட்டில் இரண்டு செய்மதிகளை ஆய்வு வேலைகளுக்காக விண்வெளிக்கு அனுப்பத்திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## - தாக்குதல் அச்சம் காரணமாக -

# பாக்தாத்திலுள்ள பிரி. தூதரக ஊழியர்கள் வெளியேற்றம்

பாக்தாத்திலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் அதன் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என விடுக்கப்பட்ட நம்பகமான அச்சுறுத்தலைத் தொடர்ந்து உயர் அதிகாரிகள் தவிர ஏனையோர் தூதரகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக லண்டனில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் தகவல் தருகையில்,

பாக்தாத்திலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் மீது தாக்குதல் நடைபெற்று 26 மணித்தியாலங்களில் பிரிட்டிஷ் தூதரகம் சம்பந்தமான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும், இதனால் இவர்கள் தூதரகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் இவர்களை மீண்டும் பாக்தாத்திற்கு அழைத்துவரும் யோசனை இப்போது இல்லையென அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை பாக்தாத்தின் ஐநா. தூதரகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு, பிரபல்யமற்ற இஸ்லாமிய தீவிரவாதக் குழுவொன்று பொறுப்பேற்றுள்ளதாக அரபு தொலைக்காட்சி நிலையம் அறிவித்துள்ளது.

## ஹமாஸ் இயக்கத் தலைவர்கள் 6 பேரின் சொத்துக்களை முடக்க அமெ. உத்தரவு

பலஸ்தீன போராளிக் குழுவான கமாஸ் இயக்கத்திற்கு நிதியுதவி வழங்கி வருவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள அவ் இயக்கத்தின் தலைவர்கள் ஆறு பேரினது நிறுவனங்களில் ஐந்தினது வருமானங்களையும், சொத்துக்களையும் முடக்கி வைக்குமாறு அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

ஜெருசலேமில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்து இந்நடவடிக்கையை எடுக்குமாறு அமெரிக்க திறை சேரிக்கு புஷ் அனுப்பியுள்ள அறிக்கையில் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, ஜெருசலேம் குண்டுத் தாக்குதலுக்குத் தாமே பொறுப்பானவர்கள் என கமாஸ் இயக்கம் கூறியிருப்பது அவ் இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்பதை உறுதி செய்வதுடன் இஸ்ரேலியர்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டவிழ்த்து விட உறுதி பூண்டிருப்பதையும் தெளிவுபடுத்துவதாக கூறியுள்ளார்.

மேலும் இஸ்ரேலியர்களுக்கும், பலஸ்தீனர்களுக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு இத்தாக்குதல் சம்பவம் பங்கம் விளைவிப்பதாகவும் புஷ் கூறியுள்ளார்.

## -மேற்குக்கரை ஆஸ்பத்திரி ஒன்றில்-

## நான்கு பலஸ்தீனப் போராளிகள் இஸ்ரேலியப் படைகளால் கொலை

மேற்குக்கரை நகரில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றிற்குள் வைத்து இஸ்ரேலியப் படையினர் நேற்று முன்தினம் மூன்று பலஸ்தீனர்களை கொன்றுள்ளனர். இவர்கள் பலஸ்தீனப் போராளிகள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அமெரிக்க ஆதரவிலான சமாதானத் திட்டம் மேலும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கிற்கு புதிய பிரதிநிதி

ஈராக்கிலுள்ள ஐநா. தலைமைக் காரியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஐக்கிய நாடுகள் பிரதிநிதியின் இடத்திற்கு ரேனறோ லோட்டீ சில்வா என்பவரை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் நியமித்துள்ளார்.

## தலிபான்கள்-இராணுவம் மோதல்; இரு படையினர் 4 தலிபான்கள் பலி!

ஆப்கானிஸ்தான் மத்திய மாகாணத்தில் நேற்று முன்தினம் இரண்டு ஆப்கான் இராணுவமும் நான்கு தலிபான் கெரில்லாக்களும் உயிரிழந்துள்ளனர்.

இஸ்லாமிய போராளிக்குழுவான தலிபான் இயக்கம் ஆப்கான் இராணுவத்துடன் மோதிய வேளை இவ் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. சுமார் 300 தலிபான் படையினர் மோதியதாகவும். மூன்று மணித்தியாலங்களுக்கு சண்டை நீடித்ததென ஆப்கான் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## விமானப் போக்குவரத்து நடந்தாலே இந்திய - பாக் புகையிரத சேவை

### இந்தியா திட்டவட்டமாக அறிவிப்பு

விமானப் போக்குவரத்தை மீண்டும் தொடக்க பாகிஸ்தான் ஒப்புக்கொள்ளும் வரை அந்நாட்டுடன் புகையிரதப் போக்குவரத்து மீண்டும் தொடக்கப்படமாட்டாது என இந்தியா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய, வெளியுறவுத் துறைச் செயலாளர் கன்பன்சிவால்,

இரு நாடுகளுக்குமிடையே மீண்டும் விமானப் போக்குவரத்து தொடங்க வேண்டும் என்றும், டில்லி - லாகூர் இடையே கூடுதல் பேருந்து போக்குவரத்தை இயக்க வேண்டுமென்றும் பாகிஸ்தானை இந்தியா வலியுறுத்தியுள்ளதாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக பாகிஸ்தானுடன் அடுத்த, வாரம் நடைபெறவுள்ள பேச்சுக்களின் முடிவை எதிர்பார்த்து மத்திய அரசு காத்திருப்பதாக கூறியுள்ள அவர், இந்தியாவின் கோரிக்கையை பாகிஸ்தான் ஏற்றுக் கொண்டால் புகையிரதப் போக்குவரத்து உடனடியாகத் தொடக்கப்படும் அல்லது அதுபற்றி பரிசீலிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் நகர்களுக்கும் காட்டுத்தீ பரவல்

பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடந்த சில நாட்களாக காட்டுத்தீ பரவிவருகின்றது.

இதனால் 17ஆயிரம் ஹெக்டெயர் பிரதேசம் முற்றாக எரிந்துள்ளன. அத்துடன் புதிதாக கட்டப்பட்ட வீடுகள் உட்பட நகர்புறமும் சேதமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடுங்காற்று காரணமாக நேற்று முன்தினமிரவு மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கும் இத்தீ பரவ ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரிட்டிஷ் கொலம்பியாவில் கட்டுப்பாடின்றிப் பரவும் காட்டுத்தீ.

# பாபர் மசூதி இடிப்பு விவகாரம் அத்வானி உட்பட 9 பேர் மீது வழக்கு

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் துணைப் பிரதமர் அத்வானி உட்பட ஒன்பது பேர் மீது எதிர்வரும் 03ஆம் திகதி குற்றச் சாட்டுக்கள் பதிவாக உள்ளதாக சி.பி.ஐ. தனி நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் துணைப் பிரதமர் அத்வானி உட்பட 09 பேர் மீதான கிரிமினல் சதிக் குற்றச்சாட்டுக்களை சி.பி.ஐ. கைவிட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதனை எடுத்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் பிரைவரேலி நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கின் விசாரணைக்கு, தடை விதிக்க மறுத்துவிட்டது.

இதனையடுத்து பிரைவரேலி நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணை தொடங்கியுள்ளது.

இதன் போது துணைப் பிரதமர் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, செல்வி உமாபாரதி, அசோக்சிங்கல் உட்பட 08 பேர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது எவருமே சம்பவ இடத்தில் இல்லையென வாதாடினார்.

மேலும் காவல்துறையின் முதல் தகவல் அறிக்கையில், பாபர் மசூதி இடிக்க, அத்வானி உள்ளிட்டோருக்கு உள்ள தொடர்பு பற்றி முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அவர்களை வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனைக் கேட்ட நீதிபதி, இது தொடர்பான ஆதாரங்களை எதிர்வரும் 27ஆம் திகதிக்குள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளார்.

அதன் பின்னர் எதிர்வரும் 03ஆம் திகதி அனைவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை அயோத்தில் ராமர் கோயில் கட்டும் பணிகளுக்காக மக்களைத் திரட்டும் இயக்கத்தை விஸ்வஹிந்து பரிஷத் தொடங்கியுள்ளது.

அயோத்தில் ராமர் கோயில் கட்டுவதற்காக நாடு முழுவதும் உள்ள மக்களைத் திரட்ட "சங்கல்ப சூத்திரா" எனும் கையில் காப்பு கட்டும் இயக்கத்தை விஸ்வஹிந்து பரிஷத் கடந்த வியாழக்கிழமை தொடங்கியுள்ளது.

மத்திய அரசின் தடையை மீறி அயோத்தியில் ராமர் கோயில் கட்டியே தீருவோம் என்றும் விஸ்வஹிந்து பரிஷத் கூறியுள்ளது.

# விளையாட்டு அரங்கு

-ஜெயந்திரன்

# புதிய திசை நோக்கி...

லண்டனுக்குச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள தமிழீழ வலைப் பந்தாட்ட அணி லண்டன் மாநகரில் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்று அந்நாட்டு திறமைவாய்ந்த பிரசித்திய அணிகளை அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

தொடர்ச்சியாக தாம் கலந்து கொண்ட போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள தமிழீழ அணி, கடந்த 15ஆம்திகதி ஐரோப்பாக் கிண்ணத் திற்காக விளையாடும் பிரபல அணி களான வேல்ஸ் நாட்டைச் சேர்ந்த நியூரவுன் அணியையும் இங்கிலாந் தின் கறுப்பினத்தவர்களைக்கொண்ட பிரபல அணியான வெம்பிளி அணி யையும் வெற்றி கொண்டுள்ளது.

மேற்படி இரு அணிகளும் ஐரோப் பாக் கிண்ணத்துக்கான போட்டியில் கலந்துகொள்ளும் மிகச் சிறந்த அணிகளாகும். வேல்சின் நியூரவுன் அணி சிறிலங்காவின் தேசிய வலைப்பந்தாட்ட அணியை நான்கு தடவைகள் தொடர்ச்சியாகத் தோற் கடித்துள்ளது.

வேல்ஸ்சின் நியூரவுன் அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து முதல் தடவை யிலேயே நான்கு இடைவேளைக ளைக் கொண்ட சுற்றில் 59-38 என்ற புள்ளி அடிப்படையில் மகத்தான வெற் றியை ஈட்டியுள் ளது தமிழீழ அணி.







இங்கிலாந்தின் மற்றொரு சிறந்த அணியான வெம் பிளி அணியை 32-16 என்ற புள்ளி அடிப்படை யில் தோற்கடித்த தமிழீழ அணி, லண்டன் மாநகரில் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளதுடன் சிறிலங்காவின் விளையாட்டு தேர்வாளர்களைத் திகைப்பில் ஆழ்த்தியுள்ளது.

விளையாட்டுக்கென்று தனித்து வமான தொழில் நுட்பங்களுடன் வளர்ந்து இன்று உச்சநிலையில் விளங்கும் ஐரோப்பாவைக் கலக்கும் அளவுக்கு தமிழீழ அணி சாதனை களைப் படைக்கின்றது என்றால் இவ் அணியில் இடம் பெறுபவர்கள் ஏன் சிறிலங்கா தேசிய அணியில் இடம்பெறுவதில்லை என்ற கேள்வி தவிர்க்கமுடியாமல் எழுகிறது.

இதில் வெம்பிளி அணியானது முழுக்க முழுக்க கறுப்பினத்தவர் களைக்கொண்டதாக விளங்குவ துடன் அதில் நான்குபேர் இங்கிலாந்து தேசிய அணியில் இடம் பிடித்துள்ள முக்கிய ஆட்டக்காரர்கள். இத்த கைய பலம் மிக்க வெம்பிளி அணியை தமிழீழ அணி அவர்களது சொந்த மண்ணில் வைத்து தோற் கடித்திருப்பது ஒரு சாதனைதான்.

இது தமிழீழ விளையாட்டு வீரர் களிடம் மறைந்து கிடந்த விளையாட் டுத் திறமையின் ஒரு முக்கிய வெளிப்பாடாகும். எனவே இதுவரை காலமும் சிறி லங்கா அரசால் தமிழர் தாயகப் பகுதி விளை யாட்டு வீரர்களின் திறமை எந்தளவு மோசமாக ஒடுக் கப்பட்டுள்ளது என் பதை விளை யாட்டு உலகம் அறிந்துகொள்ளட்டும்.

இது இவ்வாறிருக்க தமிழீழ தேசிய பெண்கள் வலைபந்து அணியால் ஏற்கனவே தோற்கடிக் கப்பட்ட 14, புலம்பெயர்ந்து லண்ட னில் வாழும் தமிழ் பெண்கள் அணிகளின் தெரிவு அணியுடன் இறுதியாக மோதவுள்ளது.

இதைவிட சுற்றுலாவை முடித் துக்கொண்டு நாடுதிரும்பும் தமிழீழ அணியைத் தம்முடன் போட்டியிட வருமாறு சிறிலங்கா தேசிய தெரிவு பெண்கள் வலைபந்தாட்ட அணி அழைப்பு விடுத்துள்ளதாக அறிய வருகின்றது.

எனவே சிறிலங்காவின் விளை யாட்டுத்துறையும், விளையாட்டு அமைப்புக்களும் எப்போதும் போலவே தேசிய அணிகளுக்கான தெரிவுகளில் தமிழர்களைப் புறக் கணித்து வந்துள்ளனர் என்பதையே மேற்படி வெற்றிகள் வெளிச்சத்துக் குக் கொண்டு வந்துள்ளது.

# எதிர்காலம்?

சிறிலங்கா கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான கௌசல்யா லொக்கு ஆராச்சி சகல வகையான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அண்மையில் லொக்கு ஆராச்சி ஓட்டிச்சென்ற கார் மோதியதில் பெண்ணொருவர் உயிரிழந்ததுடன் அவரது மகன் படுகாயமடைந்தார். இச்சம்பவம் தொடர்பாக ஆராய்ந்த சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கௌசல்யாவை அனைத்துவகை போட்டிகளில் இருந்து இடைநிறுத்தியுள்ளதுடன் அடுத்து மேற்கொள்ள வேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கை குறித்து விரைவில் அறிவிக்கவுள்ளது.

கிரிக்கெட் வீரர் என்ற கோதாவில் தனது தவறில் இருந்து எவரும் தப்புவதை சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஒருபோதும் அனுமதிக்க மாட்டாது எனவும் சட்ட நடவடிக்கையை பொறுத்தே இவர்மீதான அடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளது.


இவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு நீதிமன்றம் தண்டனை வழங்கும் பட்சத்தில் லொக்கு ஆராச்சி அடுத்த மூன்று வருடங்களுக்கு கிரிக்கெட் விளையாடுவதில் இருந்து தடைக்கு உள்ளாவார்.

தான் அறிமுகமான டெஸ்ட் போட்டியின் முதல் பந்திலேயே விக்கெட்டை வீழ்த்திய பெருமையைப்பெற்ற லொக்கு ஆராச்சி முரளிதரனுக்கு அடுத்தநிலையில் பந்துவீச்சில் விளங்குகின்றார்.

எதிர்காலத்தில் முரளிதரனின் இடத்தை நிரப்புவார் என எதிர்பார்க்கப்பட்ட மிகவும் துடிப்பான வீரரான லொக்கு ஆராச்சி வளர்ந்துவரும் சிறந்த சகலதுறை ஆட்டக்காரரும் கூட.

# பயணம் தொடருமா...?

இந்தியாவின் முன்னணி டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் மூளைத் திசுக்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புக் காரணமாக அமெரிக்க வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



இந்த திடீர் சுகயீனம் பயஸ் தொடர்ந்து விளையாடுவாரா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. இதனால் அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் அவருக்கு அற்றுப் போனது.

இரட்டையர் டென்னிஸ் பிரிவில் உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவராகத் திகழும் லியாண்டர்பயஸ் மகேஸ் பூபதியுடன் இணைந்து மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். 99ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரட்டையர் பிரிவில் விம்பிள்டன் பட்டம் வென்றதுடன் இவ்வாண்டு ஆரம்பத்தில் மாட்டினா நவரத்திலோவாவுடன் இணைந்து அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டிகளில் பட்டம் என்று எண்ணற்ற சாதனைகளுக்கு சொந்தக்காரனான பயசுக்கு ஏற்பட்ட நோயால் டென்னிஸ் உலகம் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

தற்போது நலமாய் இருக்கும் லியாண்டர் பயஸ் சிகிச்சையின் பின்னரே அவர் தொடர்ந்து விளையாடுவாரா என்பது தெரியவரும்.

# வங்குரோத்துநிலையில் டைசன்

இன்றைய உலகில் அதிக ஊதியத்தைப் பெறுபவர்களில் விளையாட்டு வீரர்கள் முக்கி யத்துவம் பெறுகின்றமை யாவரும் அறிந்த விடயமே.




ஆனால் அந்தளவுக்கு செலவு செய்கின்றார்களா என்பது ஒருபுறம் இருக்க, இதற்கு விதி விலக்காக சண்டைபோட்டே கோடிக்கணக்கான பணம் சம்பா தித்த மைக் டைசன் இன்று கடன் சுமை தலைக்குமேல் ஏறி தனது வங்குரோத்து நிலையை நீதி மன்றம் சென்று அறிவிக்கும் அள வுக்கு நிலைமை சென்றுள்ளது.

சண்டை போட்டே கோடிக் கணக்கில் சம்பாதிக்க முடியுமா? இப்படியாராவது கேட்டால் முடியும் என்று சொல்லி மைக்டைசனைக் காட்டுங்கள்.

சர்ச்சைக்கு பேர் போனவரான மைக்டைசன் குத்துச் சண்டை யின்போது தேடிய சொத்து இந்திய மதிப்பில் ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய். இப்போது கடன் தலைக்குமேல் ஏறி திணறிக்கொண்டிருக்கின்றார் இந்த இரும்பு மனிதர். நம்பமுடிகின்றதா?

ஆயிரம் கோடியை டைசன் எப்படிக் கரைத்தார் என்பது பற்றி முக்கியமான சில தரவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மனைவியை விவாகரத்துச் செய்ததில் நீதிமன்ற வழக்கு செலவுகள் மற்றும் ஜீவனாம்சமாக அவர் கொடுத்ததொகை ரூ.94 கோடி. தினம் தினம் அறிமுகமாகும் புதுப்புது கையடக்க தொலைபேசிகள், பேஜர் எல்லாம் வாங்கிக் குவித்து விடுவார் மைக் இதற்காக மட்டும் அவர் செலவு செய்தது. 20 கோடிரூபா வருடாவருடம் அமர்க்களமான விருந்துபசாரத்துக்கு 40 கோடி ரூபா. வாகனங்கள் பராமரிக்க ஆன செலவு 60 இலட்சம் ரூபா. வீடுகளில் செல்லப்பிராணியாக நாய்க்குட்டி வளர்ப்பதைப்போல் டைசன் கொஞ்சம் வித்தியாசமாக புலிவளர்க்க ஆசைப்பட்டார். இரண்டு பெங்கால் புலிக்குட்டிகளும் வாங்கினார். எவ்வளவு பணம் கொடுத்து வாங்கினார் தெரியுமா? 64 இலட்சம் ரூபா.

புலி வாங்கினால் மட்டும் போதுமா? அவற்றுக்கு முறையாகப் பயிற்சி கொடுத்து வளர்க்க வேண்டாமா? புலிக்குட்டிகளுக்கு பயிற்சி கொடுக்க அவர் செலவு செய்தது 59 இலட்சம்.

வீட்டை அலங்கரிக்க வீட்டு உபயோகப்பொருட்கள் வாங்க 140 கோடி ரூபா. வீட்டைச் சுற்றியிருக்கும் அழகான தோட்ட பராமரிப்புக்கு 94 லட்சம் ரூபா இவை அவர் சமீபகாலத்தில் செய்த செலவுகள் மட்டும்தான். இன்னும் நிறையச் செலவுகள் வெளியில் தெரியாமல் அள்ளி இறைத்திருக்கிறார்.

இப்போது கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாது திண்டாடி வருகின்றார். நிலைமை எவ்வாறு இருக்கிறது பார்த்தீர்களா?

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல் - 2003

**தமிழீழ மீட்புநிதிக் கடன்திட்டத்தின்கீழ் கடன் செலுத்தியோரில் 1500 பேர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு தொகுதியினரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மிகுதி நாளைய ஈழநாதம் நாளேட்டில் வெளியிடப்படும். இவ் 1500 பேருக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் நாளிலிருந்து 21 ஆம் நாள்வரை கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.**

## யாழ்.மாவட்டம்

### *காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு*

(நேற்றைய தொடர்ச்சி)

**தொடர்பு எண் முழுப்பெயர்**

யா/கா/807 திருமதி. ஞானேஸ்வரி தவரத்தினராசா
யா/கா/858 திருமதி. பிறேமறாஜினி சபாந்தன்
யா/கா/865 திரு. இராசையா குணசேகரம்
யா/கா/940 திரு. நல்லதம்பி சுப்பிரமணியம்
யா/கா/984 திருமதி. ரதிதேவி சபாநாயகம்
யா/கா/991 திருமதி. புஸ்பமலர் வைத்தியநாதன்
யா/கா/1012 திரு. செல்லையா சிவஞானசுந்தரம்

### *சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு*

**தொடர்பு எண் முழுப்பெயர்**

யா/ச/31 திருமதி. வசந்தி செல்வநாதன்
யா/ச/59 திருமதி. றூபி முத்துராஜா
யா/ச/79 திரு. கந்தையா கந்தசாமி
யா/ச/101 திரு. வயிரமுத்து கிருஷ்ணதாசன்
யா/ச/149 திருமதி. சுசீலாதேவி ஜெயபாலன்
யா/ச/158 திரு. செல்லையா கனகரத்தினம்
யா/ச/232 திரு. தம்பிப்பிள்ளை இராசதுரை
யா/ச/249 திரு. நாகன் செல்வம்
யா/ச/371 திரு. மூத்ததம்பி ஜெயச்சந்திரன்
யா/ச/419 திருமதி. பாக்கியம் ஞானப்பிரகாசம்
யா/ச/489 திருமதி. சறோஜினிதேவி பரமானந்தன்
யா/ச/514 திரு. சுப்பன் தனராசா
யா/ச/521 திரு. பொன்னுச்சாமி மகேந்திரன்
யா/ச/576 திரு. பொன்னர் கணேசன்
யா/ச/629 திருமதி. நாகேஸ்வரி லிங்கலிங்கம்
யா/ச/663 திரு. பிள்ளையான் கனகரெட்ணம்
யா/ச/679 திரு. அம்பலம் தர்மலிங்கம்
யா/ச/689 திரு. சிவமயம் ஸ்கந்தமயம்
யா/ச/707 திரு. முருகேசு விருத்தாசலம்
யா/ச/727 திரு. சரவணமுத்து மகேஸ்வரன்
யா/ச/778 திருமதி. புவனராணி இராசையா
யா/ச/966 திரு. கணபதிப்பிள்ளை பாலசிங்கம்
யா/ச/1009 திரு. சிற்றம்பலம் இராசரத்தினம்
யா/ச/1053 திரு. முருகேசு சின்னத்தம்பி
யா/ச/1083 திரு. நடராசா செல்வராசா
யா/ச/1105 திரு. நடராசா செல்வராசா
யா/ச/1118 திருமதி. புஸ்பராணி கனகலிங்கம்
யா/ச/1250 திரு. சதாசிவம் செல்வராசா
யா/ச/1306 திருமதி. சறோஜினிதேவி ஸ்ரீபாலச்சந்திரன்
யா/ச/1369 திருமதி. தவமணி நடராசா
யா/ச/1389 திரு. முத்துத்தம்பி யோககுமார்
யா/ச/1421 திருமதி. திருமணிச்செல்வி பரமன்
யா/ச/1424 திருமதி. சடாட்சரதேவி லோகநாதன்
யா/ச/1428 திரு. அருணாசலம் இராமநாதன்
யா/ச/1429 திரு. மாணிக்கம் இராசலிங்கம்
யா/ச/1559 திரு. அழகரத்தினம் சரவணபவன்
யா/ச/1560 திருமதி. புவனஜோதி கதிரமலைநாதன்
யா/ச/1647 திரு. கதிரவேல் அம்பலவாணர்
யா/ச/1726 திரு. சபாநாயகம் இரத்தினராசா
யா/ச/1763 திரு. கிருஸ்ணர் சுப்பிரமணியம்
யா/ச/1768 திரு. கந்தையா சரவணபவானந்தன்
யா/ச/1792 திருமதி. கோகிலாம்பாள் பிரகலாதன்
யா/ச/1819 திருமதி. தெய்வநாயகி நாகராசா
யா/ச/1858 திரு. ஆறுமுகம் குணரத்தினம்
யா/ச/1885 திரு. முருகேசு குமாரவேலு
யா/ச/1889 திருமதி. தவமணிதேவி கிருஷ்ணபிள்ளை
யா/ச/1935 திரு. கதிரவேலு கந்தையா
யா/ச/1972 திரு. முருகேசு செல்வராசா
யா/ச/2091 திரு. கந்தன் நாகமுத்து
யா/ச/2168 திரு. இராமலிங்கம் விஸ்வநாதன்
யா/ச/2281 திரு. கிருஷ்ணர் சித்திவிநாயகம்
யா/ச/2333 திருமதி. நிர்மலாதேவி இராமையா
யா/ச/2393 திரு. செல்லையா செல்வநாயகம்
யா/ச/2394 திரு. ஆசைப்பிள்ளை வேலுப்பிள்ளை
யா/ச/2414 திரு. கனகசபாபதி செல்வராசா
யா/ச/2546 திரு. வேலுப்பிள்ளை சிவானந்தன்
யா/ச/2629 திரு. பாலு பரமசிவம்
யா/ச/2676 திருமதி. அன்னலட்சுமி நடராசா
யா/ச/2684 திருமதி. சரஸ்வதி முருகேசு
யா/ச/2712 திருமதி. சிவபாக்கியம் நாகராசா
யா/ச/2715 திருமதி. ஈஸ்வரி பாலேந்திரன்
யா/ச/2745 திரு. கார்த்தியேசு இராசதுரை
யா/ச/2761 திருமதி. ஈஸ்வரியம்மாள் பாலசுப்பிரமணியம்
யா/ச/2786 திருமதி. இலங்கேஸ்வரி சிவகுரு
யா/ச/2832 திரு. சின்னவி சரவணமுத்து
யா/ச/2833 திருமதி. இராசமணி சொக்கலிங்கம்
யா/ச/2907 திருமதி. மனோன்மணி அப்பாத்துரை
யா/ச/2969 திருமதி. கலாநாயகி நந்தகுமார்
யா/ச/2973 திரு. சதாசிவம் இரத்தினசபாபதி
யா/ச/3023 திருமதி. மலர் மீனேஸ்வரன்
யா/ச/3043 திருமதி. நாகம்மா தம்பிராசா
யா/ச/3082 திரு. வன்னியன் நாகலிங்கம்
யா/ச/3097 திருமதி. கனகம்மா பொன்னையா
யா/ச/3118 திருமதி. திருஞானசவுந்தரி தவேந்திரநாதன்
யா/ச/3119 திரு. சம்பந்தர் நாகரத்தினம்
யா/ச/3160 திருமதி. சாருகேசி சிவகந்தராசன்
யா/ச/3319 திரு. சீனிவாசகம் வைரமுத்து
யா/ச/3334 திரு. இராசரத்தினம் சிறீரஞ்சன்
யா/ச/3343 திருமதி. அருட்கலைவாணி இராசையா
யா/ச/3366 திருமதி. மங்கையர்க்கரசி இரத்தினவடிவேல்
யா/ச/3391 செல்வி. திலகவதி ஆறுமுகம்
யா/ச/3440 திருமதி. தனலட்சுமியம்மா காசிப்பிள்ளை
யா/ச/3498 திருமதி. ஜெயராணி மகேஸ்வரன்
யா/ச/3506 திரு. செல்லத்துரை சிவசுப்பிரமணியம்
யா/ச/3532 திருமதி. வியாளாச்சி இளையதம்பி
யா/ச/3618 திரு. முருகர் மாணிக்கம்
யா/ச/3711 செல்வன். குணரத்தினம் சுதர்சனன்
யா/ச/3718 திரு. பொன்னம்பலம் நடேஸ்வரன்
யா/ச/3739 திருமதி. பவளம்மா தேவராஜா
யா/ச/3773 திரு. கந்தையா ஞானசேகரம்
யா/ச/3774 திரு. மாணிக்கம் நாகேசு
யா/ச/3859 திரு. சின்னத்துரை மகேந்திரன்
யா/ச/3883 திரு. சிவப்பிரகாசம் குபேரன்
யா/ச/3894 திரு. வயித்திலிங்கம் ஸ்கந்தராசா
யா/ச/3954 திரு. முத்துக்குமாரு குமாரசாமி
யா/ச/3959 திரு. குமாரசிங்கம் குகதாசன்
யா/ச/4046 திரு. சபாபதிப்பிள்ளை றங்கநாதன்
யா/ச/4069 திரு. ஞானானந்தராஜா தேவஞானன்
யா/ச/4110 திரு. நடராசா மகேந்திரராசா
யா/ச/4164 திரு. வயிரவனாதர் முருகேசு செல்லத்துரை
யா/ச/4172 திரு. சுப்பிரமணியம் குணரத்தினம்
யா/ச/4192 திரு. சின்னத்துரை இன்பராசா
யா/ச/4294 திருமதி. தங்கம்மா சிதம்பரப்பிள்ளை
யா/ச/4296 திருமதி. செல்வராணி கிருஷ்ணமூர்த்தி
யா/ச/4332 திரு. வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
யா/ச/4344 திரு. முருகேசு கிருஷ்ணமூர்த்தி
யா/ச/4352 செல்வி. தயாளினி இராஜநாயகம்
யா/ச/4370 திரு. பரராசசிங்கம் தங்கவேல்
யா/ச/4373 திரு. நடராஜா தேவராஜா
யா/ச/4397 திரு. கனகரத்தினம் பிரபாகரன்
யா/ச/4420 திருமதி. இரத்தினேஸ்வரி ராஜா
யா/ச/4488 திரு. முருகுப்பிள்ளை விக்னேஸ்வரநாதன்
யா/ச/4496 திருமதி. மலர்மாமணியம்மா இராசதுரை
யா/ச/4522 திருமதி. டுவதி சிதம்பரப்பிள்ளை
யா/ச/4546 செல்வி. சந்திரராணி பொன்னுத்துரை
யா/ச/4560 திருமதி. பூலோகநாயகி பேரானந்தசிவம்
யா/ச/4649 திருமதி. புனிதவதி மகாலிங்கம்
யா/ச/6800 திரு. சுப்பர் பஞ்சாட்சரம்

### *தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு*

**தொடர்பு எண் முழுப்பெயர்**

யா/தெ/20 திருமதி. சுகிர்தம் தில்லையம்பலம்
யா/தெ/91 திரு. செல்வநாயகமூர்த்தி தேவநாதன்
யா/தெ/103 திருமதி. விக்கினேஸ்வரி சண்முகசுந்தரம்
யா/தெ/121 திரு. இரத்தினவேல் ஞானசம்பந்தன்
யா/தெ/195 திருமதி. வ்ஜயலட்சுமி சிதம்பரநாதன்
யா/தெ/232 திரு. அம்பலவாணர் சோமபாலன்
யா/தெ/249 திரு. தம்பையா விஜயசிங்கம்
யா/தெ/314 திருமதி. விசாலாட்சி சிவசிதம்பரம்
யா/தெ/399 திருமதி. இந்திராணி செல்வேந்திரன்
யா/தெ/468 திரு. கணபதிப்பிள்ளை சிவஞானம்
யா/தெ/595 திரு. வன்னியசிங்கம் குமாரதாசன்
யா/தெ/619 திரு. கணேசனார் நாமநாதன்
யா/தெ/641 திருமதி. நாகம்மா சிவசுப்பிரமணியம்
யா/தெ/665 திரு. சிவராமலிங்கக்குருக்கள் நாகேந்திரன்
யா/தெ/699 திருமதி. றோஸ்நேசரத்தினம் செல்வரத்தினம்
யா/தெ/704 திரு. சீனிவாசகம் செல்வரத்தினம்
யா/தெ/732 திரு. சின்னையா ஆனந்தராசா
யா/தெ/754 திரு. செல்வநாயகம் செல்வத்தம்பி
யா/தெ/767 திரு. சிவஞ்ஞானசுந்தரம்பிள்ளை சிவகுமார்
யா/தெ/853 திரு. தம்பு செல்லத்துரை
யா/தெ/887 திரு. முருகேசு விநாயகமூர்த்தி
யா/தெ/907 திரு. கனகரத்தினம் ரகுலோசன்
யா/தெ/993 திருமதி. சரஸ்வதி இரங்கநாதன்
யா/தெ/999 திருமதி. மனோன்மணி தருமராஜா
யா/தெ/1088 திருமதி. சகிதேவி கந்தையா
யா/தெ/1091 திரு. கந்தையா கலாரஞ்சன்
யா/தெ/1218 திருமதி. இராஜேஸ்வரி லோகராஜா
யா/தெ/1237 திருமதி. தங்கம்மா பொன்னுத்துரை
யா/தெ/1259 திரு. விசுவநாதர் கனகசுந்தரம் பாலசுப்பிரமணியம
யா/தெ/1352 திரு. சபாரத்தினம் திருமால்
யா/தெ/1442 திரு. கந்தையா நல்லையா
யா/தெ/1473 திரு. வன்னித்தம்பி வைரவநாதன்
யா/தெ/1476 திருமதி. பரமேஸ்வரி ஜெயரட்னம்
யா/தெ/1529 செல்வி. கவுரிதேவி சுந்தரமூர்த்தி
யா/தெ/1606 திருமதி. தேவாம்பிகை மயில்வாகனம்
யா/தெ/1658 திரு. வயிரமுத்து கனகசபாபதி
யா/தெ/1677 திரு. வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம்
யா/தெ/1740 திருமதி. சறோஜாதேவி சிவபாதம்
யா/தெ/1749 திரு. சின்னத்துரை சண்முகநாதன்
யா/தெ/1793 திரு. சடையர் ஐயம்பிள்ளை
யா/தெ/1865 திரு. திருச்சிற்றம்பலம் யோகரத்தினம்
யா/தெ/1950 திருமதி. நகுலேஸ்வரி சந்திரசேகரம்
யா/தெ/1969 திரு. ஆறுமுகம் கந்தசாமி
யா/தெ/1976 திரு. செல்லையா சிவயோகநாதன்
யா/தெ/2016 திருமதி. ஞானமலர் துரைச்சாமி
யா/தெ/2066 திருமதி. தயாளமணிஅம்மாள் கனகசிங்கம்
யா/தெ/2148 திருமதி. சோதிலட்சுமி தம்பிரத்தினம்
யா/தெ/2156 திரு. நாகராசா சிவபாதசுந்தரம்
யா/தெ/2164 திரு. அம்பலவாணர் பாலச்சந்திரன்
யா/தெ/2195 திரு. தம்பிஐயா சின்னத்துரை
யா/தெ/2199 செல்வி. விஜயலக்சுமி இரத்தினம்
யா/தெ/2247 திரு. தம்பிப்பிள்ளை செல்லத்துரை
யா/தெ/2258 திருமதி. ஜெகதாம்பிகை சத்தியசீலன்
யா/தெ/2415 திரு. சுப்பையா பஞ்சரத்தினம்
யா/தெ/2439 திரு. முருகையா நவரட்ணம்
யா/தெ/2496 திரு. முத்தையா தேவராஜா
யா/தெ/2502 திரு. வல்லிபுரம் திருச்செல்வம்
யா/தெ/2537 திருமதி. பூரணம் முருகையா
யா/தெ/2559 திரு. பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம்
யா/தெ/2592 திரு. வேலுப்பிள்ளை அமரசிங்கம்
யா/தெ/2642 திருமதி: இந்திராணி பத்மநாதன்
யா/தெ/2666 திரு. முத்துத்தம்பி குணரத்தினம்
யா/தெ/2679 செல்வி. விஜயமாலா கதிரிப்பிள்ளை
யா/தெ/2749 திருமதி. இராசம்மா இரத்தினம்
யா/தெ/2797 திருமதி. மகேஸ்வரி நடராசா
யா/தெ/2800 திரு. விஸ்வலிங்கம் திருலிங்கேஸ்வரன்
யா/தெ/2842 திரு. மனுவேற்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
யா/தெ/2845 திருமதி. மீனகாந்தி பாலகிருஷ்ணன்
யா/தெ/2872 திரு. வேலுப்பிள்ளை தம்பு நடராசா
யா/தெ/2892 திருமதி. கீதா சிறீஸ்கந்தா
யா/தெ/2893 திருமதி. அன்னலட்சுமி விக்கினேஸ்வரன்
யா/தெ/2954 திருமதி. மங்களேஸ்வரி விமலானந்தராசா
யா/தெ/2992 திரு. சின்னத்தம்பி நல்லதம்பி
யா/தெ/3007 திரு. பொன்னுத்துரை பாலகுமார்
யா/தெ/3008 திரு. இராயப்பு அந்தோனிப்பிள்ளை
யா/தெ/3056 செல்வி. மொய்றா ஜயந்தினி சந்தியாகோ
யா/தெ/3081 திரு. அருளம்பலம் நீதிரஞ்சன்
யா/தெ/3084 திரு. வன்னித்தம்பி புஸ்பதேவன்
யா/தெ/3114 திருமதி. தெய்வரதி கணேசலிங்கம்
யா/தெ/3137 திரு. மயில்வாகனம் லோகேஸ்வரன்
யா/தெ/3141 திரு. கதிர்காமு சிவானந்தம்
யா/தெ/3157 திருமதி. பரமேஸ்வரி கந்தையா
யா/தெ/3158 திரு. கந்தையா உருத்திரசேனன்
யா/தெ/3176 திரு. நமசிவாயம் பாலச்சந்திரன்
யா/தெ/3178 திரு. நாகலிங்கம் ஜெயசீலன்
யா/தெ/3261 திருமதி. வசந்தாதேவி பத்மநாதன்
யா/தெ/3270 திரு. வல்லிபுரம் குமாரசாமி
யா/தெ/3274 திருமதி. கமலாதேவி சிறிஸ்கந்தராசா
யா/தெ/3298 திரு. வன்னித்தம்பி வயிரவப்பிள்ளை
யா/தெ/3331 திருமதி. பரமேஸ்வரி விஸ்வலிங்கம்
யா/தெ/3391 திரு. பொன்னர் சின்னத்துரை
யா/தெ/3397 திரு. கந்தையா சிவராசா
யா/தெ/3468 திருமதி. புஸ்பராணி டெலான்சா
யா/தெ/3569 திரு. சண்முகராஜா ஜெகதீஸ்வராஜா
யா/தெ/3591 திரு. அரியகுட்டி குகேஸ்வரன்
யா/தெ/3594 செல்வி. சோதிமதி பொன்னையா
யா/தெ/3696செல்வி. நாகரஞ்சனி செல்லையா
யா/தெ/3722 திரு. நாகமுத்து கந்தையா
யா/தெ/3740 திரு. பொன்னுத்துரை உருத்திராபதி
யா/தெ/3760 செல்வி. திருஅருட்செல்வி தவவேந்திரன்
யா/தெ/3802 திரு. செல்லத்துரை மகாலிங்கம்
யா/தெ/3848 திருமதி. பிள்ளையம்மா சிவலிங்கம்
யா/தெ/3917 திரு. சுப்பையா சிவலிங்கம்
யா/தெ/3934 திருமதி. சறோஜினிதேவி சிவபுத்திரன்
யா/தெ/3966 திரு. ஐயாத்துரை சிங்கராசா
யா/தெ/3969 திரு. கந்தப்பிள்ளை செல்வநாயகம்
யா/தெ/3983 திருமதி. செல்லம்மா இரத்தினசிங்கம்
யா/தெ/4247 திருமதி. பாலயோகினி சண்முகநாதன்
யா/தெ/4281 திரு. இரத்தினம் துரைச்சாமி
யா/தெ/4397 திரு. சித்தர் சிதம்பரம்
யா/தெ/4411 திருமதி. தாயீஸ்குணலீலா அருளானந்தம்
யா/தெ/4442 திரு. தாமன் சின்னத்தம்பி
யா/தெ/4451 திரு. சின்னத்தம்பி சுத்தானந்தம்

## -கிளிநொச்சி மாவட்டத்தில்-

# ஆறு கமநல கேந்திர நிலையங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இல்லை

**கிளிநொச்சி மாவட்டத்தில் ஆறு கமநல கேந்திரநிலையங்களில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவிகள் வெற்றிடமாக உள்ளன. புதிய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கமநல அபிவிருத்தித் திணைக்களம் நியமிக்காததினால் இவ்வெற்றிடம் கடந்த பல வருடங்களாக காணப்படுகிறது.**

முழங்காவில், புளியம்பொக்கணை, பளை, கிளிநொச்சி, உருத்திரபுரம், இராமநாதபுரம் ஆகிய ஆறு கமநல கேந்திரநிலையங்களிலேயே, மேற்படி வெற்றிடம் காணப்படுகிறது. தற்போது பூநகரி கமநல கேந்திர நிலைய கமநல உத்தியோகத்தர் என். சுந்தர மூர்த்தியும், அக்கராயன் கமநல கேந்திர நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். கதிர்காமநாதனுமே மேற்படி வெற்றிடமாக உள்ள ஆறு கமநலகேந்திர நிலையங்களில் இருவரும் தலா மூன்று கமநல கேந்திர நிலையங்களில் கிழமையில் ஒவ்வொரு நிலையத்துக்கும் ஒருநாள் சென்று தமது கடமைகளை மேலதிகமாக செய்து வருகின்றனர். இதன் காரணமாகவே நியாப்திட்ட மூலமும், உலக உணவு திட்டத்தின் கீழ் இன்னும் பல நிறுவனங்களின் அபிவிருத்தித்திட்டங்கள், குறிப்பாக சிறு நீர்ப்பாசன திட்டம் போன்ற பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில் இப்பிரதேசங்களில் தாமதங்கள் ஏற்பட்டு வருவதாக இப்பிரதேசங்களைச் சேர்ந்த உள்ளூர் பொதுஅமைப்புப் பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர். (14)

## கிளி/தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் பயிற்சிகளை முடித்தோர் கவனத்திற்கு

கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் இருந்து பயிற்சி முடித்து வெளியேறிய அனைத்து மாணவர்களுக்கும், மூன்றாம் நிலை மற்றும் பயிற்சி அமைச்சின் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை மூலம் அரச அங்கீகாரம் உடைய சான்றிதழ் வழங்க மேற்படி அதிகாரசபை ஒப்புதல் அளித்துள்ளமையால் இதுவரை பயிற்சி முடித்து வெளியேறிய அனைத்து மாணவர்களையும் எதிர்வரும் 31.08.2003ற்கு முன் உரிய விண்ணப்பப்படிவத்தினை தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் பெற்று, பூர்த்தி செய்து தருமாறு கிளி. தொழில்நுட்பக் கல்வி நிறுவன அதிபர் கேட்டுள்ளார்.

## மருத்துவ பரிசோதனைக்காக பதிவு செய்தோர் கவனத்திற்கு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் மருத்துவ பரிசோதனைக்காகப் பதிவு செய்த அரச ஊழியர்கள் கீழ் குறிப்பிடும் திகதிகளில் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எதிர்வரும் 27 ஆம் திகதிக்குரியவர்கள் செப்ரெம்பர் மாதம் 05 ஆம் திகதியும், செப்ரெம்பர் 10 ஆம் திகதிக்குரியவர்கள் செப்ரெம்பர் 19 ஆம் திகதியும், செப்ரெம்பர் 24 ஆம் திகதிக்குரியவர்கள் ஒக்டோபர் 03 ஆம் திகதியும் சமுகம் தருமாறு கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

## மக்கள் வங்கிக்கிளை முல்லை நகரில் திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மக்கள் வங்கிக் கிளை கடந்த புதன் கிழமை மீண்டும் முல்லைத்தீவு பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பமாகியுள்ளது.

மக்கள் வங்கி முகாமையாளர் ம.செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் மக்கள் வங்கி வன்னிப் பிராந்திய முகாமையாளர் சிவபாதவிருதயர் கட்டடத்தின் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து இவ்வளவு காலமும் புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த இவ் வங்கி திங்கள், புதன் ஆகிய இரு தினங்களே முல்லைத் தீவில் இயங்கும் எனவும் காலப்போக்கில் வாடிக்கையாளர்கள் கூடும் போது வெகு விரைவில் முல்லைத்தீவில் நிரந்தரமாக இயங்கும் எனவும் மக்கள் வங்கி முகாமையாளர் சிவபாத விருதயர் கூறினார். (20)


## 31ஆம் நாள் நினைவுருகலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
17
□
09
□
1938



உதிர்வு
27
□
07
□
2003

### அமரர் திருமதி சிவஞானசுந்தரம் சரஸ்வதி

ஐயிரண்டு, திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்து - செய்யவிரு
கைப்புறத்திலேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்போம் இனி.

26-08-2003 வல்வெட்டித்துறை சோடாக்கடை வீதி ஊரிக்காட்டிலுள்ள இ. நிர்த்தனசுந்தரத்தின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

குடும்பத்தினர்,
சோடாக்கடை வீதி, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (3649)


## கொடுப்பனவு வழங்கல்

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் உடையார் கட்டு தெற்கு, உடையார்கட்டு வடக்கு, சுதந்திரபுரம் பகுதி மக்களுக்கான மீளக் குடியமர்வுக் கொடுப்பனவாக ரூபா-25,000 வழங்கப்படுகிறது. இக் கொடுப்பனவை வங்கியிலிருந்து மக்கள் பெற்று வருகின்றனர். (19)

## அலங்கார உற்சவம்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு,சுதந்திரபுரம் சந்தி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறும்.

## செயல் மூலம் கற்றல் செயலமர்வு திகதி மாற்றம்

(பூநகரி)

பூநகரிக் கோட்ட அதிபர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த செயல்மூலம் கற்றல் செயலமர்வு 25,26ஆம் திகதிகளில் இருந்து 24,25ஆம் திகதிகளிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே இதனைக் கவனத்திற்கொண்டு இன்றும் நாளையும் பூநகரி ம.வி.இல் நடைபெறும் இச்செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு பூநகரிக் கோட்ட அதிபர்களை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.

## மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மீனவர்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்றுள்ளது.

வெளிநாட்டவர்களின் மீன்பிடிப்படகுகள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

அகில இலங்கை ஒருங்கிணைந்த மீனவர் அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

## வெயிலில் நின்று அவதியுற்று பணிகளைப் பெறும் மக்கள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேசச் செயலகத்தில் செயலகப் பணிகளைப் பெறச்செல்லும் மக்கள் வெயிலிலும் கட்டடத்தாவாரங் களிலும் தரித்து நின்றே தமது அலுவல்களைப் பெற வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

மேற்படி கரைச்சி பிரதேசச் செயலகம் தற்போது தனது சொந்த இடத்தில் புதிய கொட்டகைகள் அமைக்கப்பட்டு இயங்கிவரும் வேளையில், மக்கள் தங்கள் செயலகப் பணிகளைப் பெறச் செல்லும் வேளையில் அங்கு மக்கள் தங்குவதற்கென கொட்டகைகள் எதுவுமற்ற நிலையில் செயலக தாவாரங்களின் கீழும் குடை பிடித்த வண்ணமும் நின்று தங்கள் அலுவல்களைப் பெற்றுச் செல்லும் அவல நிலையினைக் காணக்கூடியதாகவுள்ளது. (சோ)



## வடமராட்சி பொற்பதியில் இளைஞன் மீது கடற்படை தாக்கு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பொற்பதி கிராமத்தில் இளைஞன் ஒருவர் சாதாரண விடயம் ஒன்றுக்காக சிறிலங்கா இராணுவத்தினரால் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி வடமராட்சி பொற்பதி கிராமத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சி. ஜெயச்சந்திரன் (வயது-22) என்ற இளைஞனே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் இப்பகுதிக்குச் சென்ற இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவினரிடம் பாதிக்கப்பட்ட இளைஞன் குறிப்பிடும் போது, சம்பவ தினத்தன்று இரண்டு கைககளையும் கட்டியவாறு வழியில் நின்று கொண்டிருந்த வேளை அப்பகுதி வழியாக போதையில் வந்தகொண்டிருந்த இரு கடற்படைச் சிப்பாய்கள் தள்ளாடிய நிலையில் மிதிவண்டியை ஓட்டி வந்ததால் தனது முழங்கையுடன் மிதிவண்டி மோதியதாகவும். இதனால் ஆத்திரமடைந்த படையினர் என்னைக் கைகளாலும் கால்களாலும் மிகவும் மோசமாகத் தாக்கிவிட்டு, தற்போதைய சமாதான நிலையைக் கருத்தில் கொண்டு சும்மா விடுவதாகவும் இல்லை என்றால் சுட்டுத் தள்ளி விடுவோம் என்று கூறியதாகவும் அவ்விளைஞன் முறைப்பாடு செய்துள்ளார். (33)

## கணக்கு இலக்கங்கள் மாறியதால் பணம் பெறமுடியாது அவதி

வடக்கு-கிழக்கு அவசர புனர்வாழ்வு, புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட உதவித் திட்டம் U.A.S. என தலைப்பிடப்பட்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் 25,000 ரூபா நிதி பெறுவதற்காக கிளிநொச்சி கச்சேரியால் மக்களுக்கு அனுப்பப் பட்ட கடிதத்தில் அவர்களின் முழுப்பெயரும் விலாசமும் சரியாக எழுதப்பட்ட நிலையில் அவர்களின் கணக்கு இலக்கங்கள் மாறியுள்ளதால் அப்படி மாறிவந்த கடிதத்தினையுடைய மக்கள், கிராம சேவகர், உதவி அரச அதிபர் பணிமனையென மாறி மாறி ஓடித் திரிவதைக் காணக் கூடியதாக உள்ளது. கூடுதலாக இயக்கச்சி கோயில் வயல் கிராம மக்களுக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இது யாருடைய பிழை என்று தெரியாது என்று மக்கள் அவலப்படுகின்றனர். (11)

## மட்டு. வெபர் மைதானத்தில் புகைப்படக் கருவிக்குத் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெபர் மைதானத்துக்கு கமரா மற்றும் வீடியோக்கமராக்களைக் கொண்டு செல்வதற்குப் படையினர் தடைவிதித்துள்ளனர்.

ஊடகவியலாளர்கள் வீடியோ கமராக்களை கொண்டு செல்வதாயின் முன் அனுமதி பெற வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட 23வது படைப்பிரிவு கட்டளைத்தளபதி கேணல் ராஜித டி சில்வா கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சங்கமும் மாநகரசபையும் இணைந்து உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி நிகழ்ச்சி ஒன்றை நடாத்தியிருந்தன. இதற்கு அழைந்துச் செல்லப்பட்ட ஊடகவியலாளர் தடுக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார். இது தொடர்பாக கேட்டபோதே ராஜித டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## சமாதானத்திற்கு எதிரான ஜே.வி.பி.யின் யுத்தம் நாளை காலியில் ஆரம்பமாகித் தொடரும்

### - கட்சிச் செயலாளர் விமல் வீரவன்ச அறிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பி.யினர் இலங்கை முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். "எமது முதலாவது யுத்தம் தெற்கிலுள்ள காலியில் திங் களன்று (நாளை) ஆரம்பமாகி கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் முடிவடையும்" என ஜே.வி.பி. செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

"வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இந்த யுத்தம் நடைபெறும். வடக்கு-கிழக்கில் கூடுதலான யுத்தங்கள் நடைபெறும்" என மேலும் அவர் கூறினார். இதேவேளை வடக்கு-கிழக்கு, சிங்கள சபை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு மகஜர் ஒன்றையும் அனுப்பியுள்ளனர்.



**சிந்தனைக்கு**

இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்தவொரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 24-08-2003

## முரண்பாடுகள் குறையப் போவதில்லை

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்தவென 500 பொலிசாரைக் கிழக்கு மாகாணத்தில் இருந்து - குறிப்பாக முஸ்லிம் இளைஞர்களைத் திரட்டுவதற்கு அரசாங்கம் செய்துள்ள முடிவானது, சிறிலங்கா ஆட்சியாளர் இன்னமும் சமூகங்களுக்கு இடையிலான முரண்பாட்டை அரசியலாக்குவதைத் தவிர்த்துக் கொள்ளத் தயாராக இல்லை. அன்றி தேசிய நலன் என்ற ரீதியில் எதையும் சிந்திக்கும் பக்குவத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ள சில கொலைகள், ஆட்கடத்தல்கள் - குறிப்பாக முஸ்லிம் இளைஞர்கள் சிலர் கொல்லப்பட்டமை தொடர்பாக ஏற்பட்டுள்ள பதட்டம், பாதுகாப்புக் குறித்து எழுந்துள்ள கேள்விகள் என்பன காரணமாக இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளது. அதாவது முஸ்லிம் இளைஞர்களைப் பொலிஸில் சேர்த்துக் கொள்வதன்மூலம், முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை இதுவென அரசியல் ரீதியில் இதற்கு விளக்கம் அளிக்கப்படுகின்றது.

இதன் மறைமுக அர்த்தமானது தமிழர் தரப்பிடம் இருந்து, அதாவது விடுதலைப்புலிகளின் தாக்குதலில் இருந்து முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதாகும். ஏனெனில், முஸ்லிம்களின் கொலைகளுக்கு விடுதலைப்புலிகளே காரணம் என்பது முஸ்லிம் தரப்பின் - குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸின் குற்றச்சாட்டாகும்.

ஆனால் இத்தனைக்கும் இக்கொலைக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாக ஆதாரங்கள் எவையும் கிடைக்கப் பெற்றதாக இல்லை. அத்தோடு, இக்கொலைகள் தொடர்பாக வேறு கோணத்தில் விசாரணைகள் மேற்கொள்வதற்கான முயற்சிகளைக் கூட பொலிஸ் தரப்பு தொடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இது ஒருபுறம் இருக்க கிழக்கில் இத்தகைய கொலைகள் இடம்பெறுவதும் பின்னர் பதட்ட நிலை உருவாவதும் அடிக்கடி நிகழும் சம்பவங்களும் ஆகும். இதேவேளை கிழக்கில் சமூகங்களுக்கு இடையிலான கடந்த காலத்தில் நிகழ்ந்த வன்முறைகளில் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களேயாகும். இதனை எவருமே மறுத்துவிட முடியாது. தமிழருக்கு எதிரான இவ் வன்முறையில் முஸ்லிம்களும் கணிசமான பங்கை வகித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கிழக்கில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துள்ளது என்ற ரீதியில் முஸ்லிம் இளைஞர் இடையில், பொலிஸ் படைக்கு ஆட்சேர்க்க அரசாங்கம் செய்துள்ள முடிவானது கிழக்கில் மேலும் பதட்டத்தையும், நெருக்கடிகளையும் அதிகரிக்க உதவுவதாக இருக்குமேயொழிய சமூகங்களுக்கு இடையில் இணக்கமானதொரு போக்கைக் கைக்கொள்வதற்கு வழி வகுப்பதாக அமையக் கூடியதாக இருக்கமாட்டாது.

அரசாங்கத்தின் இவ் அவசர அறிவிப்பானது, திடீரென வெளிவருதற்குக் காரணம் எது என்பதை அரசியலைச் சிறிதளவு புரிந்து கொள்பவர்களினால் கூட புரிந்து கொள்ள முடியும். அதாவது அமைச்சர் ஹக்கீம் விடுத்த அரசிற்கான ஆதரவை வாபஸ் பெறலாம் என்ற எச்சரிக்கையைத் தொடர்ந்தே ஆட்சேர்ப்பு உத்தரவு வெளிவந்தது என்பது வெளிப்படையானது.

ஆனால், அரசாங்கத்தின் இம்முடிவானது தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் முரண்பாடுகளையும், நெருக்கடிகளையும் தோற்றுவிப்பதாக அமையுமேயொழிய ஒருபோதும் அமைதியையும், பாதுகாப்பையும் ஏற்படுத்த வல்லதாக இருக்கமாட்டாது. பொலிஸாரினாலோ ஆயுதபடையினராலோ சமூகங்களுக்கிடையிலான முரண்பாட்டைத் தீர்த்து வைக்க முடியுமானால் இலங்கையின் இனப் பிரச்சினை இத்தனை தூரம் விஸ்வரூபம் எடுத்திருக்கமாட்டாது.

முஸ்லிம் மக்களின் தற்போதைய கொலைகளுக்கு யார் காரணம்? கொலைகளுக்குக் காரணம் என்ன? என்பனவெல்லாம் தற்பொழுதும் தீர்மானிக்கப்படாதவையாகவே உள்ளன. ஆனால், இதனை அடிப்படையாகக் கொண்டு சமூகங்களுக்கு இடையில் முரண்பாட்டைத் தீவிரப்படுத்துவதானது, இலங்கை அரசின் தேசிய ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் கேள்விக்குரியதாக்கிவிடும். அதாவது சமூகங்களுக்கு இடையில் வளரும் முரண்பாடானது உறவு முறையை இல்லாது ஒழித்து விடக்கூடியதாகும்.

நாட்டில் உள்ள ஒவ்வொரு மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டியதென்பது அரசாங்கத்தின் பொறுப்பே ஆகும். ஆனால், பாதுகாப்பு என்ற ரீதியில் மேற்கொள்ளும் நடவடிக்கையானது மற்றொரு சமூகத்தைப் பாதிக்குமானால், அது பாதுகாப்பிற்குப் பதில் நாட்டில் நெருக்கடியையே தோற்றுவிக்கத்தக்கதாகும். ஆனால், ஆட்சியில் இருப்பவர்கள் இதனைப் புரிந்து கொள்வதாக இல்லை. புரிந்து கொண்டாலும் தமது அதிகார அபிலாசைகள் காரணமாக அவற்றை அவர்கள் கைவிடுவதாக இல்லை. இந் நிலையில் சமூகங்கள் இடையில் முரண்பாடுகள் தீவிரமானதைத் தவிர வேறு எதுவும் நடைபெறப்போவதில்லை.

### - புதிய காணி மசோதா மூலம் -


# அரசாங்க காணிகளை ஐ.தே.மு. வெளிநாட்டவருக்கு மலிவாக விற்கிறது

புதிய காணி மசோதா மூலம் ஐ.தே.மு. அரசாங்கம் காணிகளை வெளிநாட்டவருக்கு மலிவான விலைக்கு விற்கிறது.

நினைத்துப்பார்க்க முடியாத விலைகளுக்கு இவ்வரசாங்கம் வெளிநாட்டவருக்கு காணிகளை வழங்குகிறது என ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது. அனுராதபுர மாவட்டத்தில் தந்திரிமலையில் 25 ஆயிரம் ஏக்கரை நோர்வேக்கும் தங்கல்ல, பேருவளை, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் சிலவற்றை வெளிநாட்டவருக்கும் பகிர்ந்தளித்துள்ளது.

நாடு இன்று பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது. வடக்கு கிழக்கை புலிகளுக்கு இவ்வரசு பரிசாக வழங்கியதுடன் தெற்கை வெளிநாட்டவருக்கு தாரைவார்க்கிறது. கிழக்கு முஸ்லிம்கள் இன்று பல இன்னல்களைச் சந்திக்கின்றனர். புலிகள் அனைத்து இனங்களையும் அடக்கியாள்கின்ற அந்த சுதந்திரத்தை அரசு அவர்களுக்கு வழங்கியிருக்கின்றது என அக்கட்சி மேலும் குற்றம் சாட்டியுள்ளது.

# ரஞ்சித் கொலைச் சந்தேகநபர் கொலை; நான்கு பொலிசார் மீது விசாரணை



கொலை செய்யப்பட்ட சந்தேக நபரின் சடலம்

முன்னாள் தென்மாகாண அமைச்சர் ரஞ்சித் கொலைச் சந்தேகநபர் கடந்த புதன்கிழமை கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நான்கு பொலிசார் விசாரணைக்கு உட்படுத்தபடவுள்ளனர். மொறட்டுவ கட்டுப் பெத்த சந்தியில் காவல் கடமைக்கு நியமிக்கப்பட்டிருந்த நான்கு பொலிசாருமே இவ்வாறு விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

கடந்த புதனன்று அங்கு கடமைக்கு நியமிக்கப்பட்டிருந்த 4 பொலிசாரும் சம்பவம் நடைபெற்று காயமடைந்தவர்களை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்ற பின்னரே சம்பவ இடத்திற்கு வந்துள்ளதாக பொலிஸ் அதிகாரி றொசான் சில்வா தெரிவித்திருக்கிறார். குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பாக அன்று கொல்லப்பட்ட சுனில் ரத்னவீர ஒருவரே தப்பியிருந்தார்.

மேலும் இச்சம்பவத்தில் 6 வயது சிறுமி யொருவரும் கொல்லப்பட்டதுடன் அவரின் தாய் பலத்த சூட்டுக் காயத்துக்குள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# தேர்தல் முறை மறுசீரமைப்புக்குழு 19 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்

தேர்தல் முறையை மறுசீரமைப்பது குறித்து ஆராயும் பாராளுமன்றக்குழுவின் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன அதன் தலைவராவார். சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா நேற்றுமுன்தினம் 19 உறுப்பினர்களின் பெயர்களையும் அறிவித்துள்ளார். தேர்தல் முறையை மறுசீரமைப்பதற்குத் தேவையான யோசனைகளை சிபார்சு செய்யும் அதிகாரத்தை இக்குழு கொண்டிருக்கும். தேர்தல் அரசியல்யாப்புத் துறைசார் நிபுணர்களிடமிருந்து உதவிகளைப் பெறுவதுடன் பல தரப்பினரிடமிருந்து யோசனைகளைப் பதிவு செய்யவும் இக்குழுவினால் முடியும் எனக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இக்குழுவின் கடமைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகுமென குணவர்த்தன கூறியுள்ளார். குறிப்பாக தற்போது நடைமுறையில் இருக்கின்ற மாவட்ட முறைத் தேர்தலை மாற்றுவது தொடர்பாக இக்குழு ஆராயும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். தொகுதி அடிப்படையிலும் விகிதாசார அடிப்படையிலும் புதிய தேர்தல் முறை இருக்கவேண்டும் என்பதையே சகல கட்சிகளும் விரும்புவதாகக் கூறியுள்ளார்.

இவ்வருடம் இறுதிக்குள் தற்போதைய தேர்தல்முறையை மாற்றுவதற்கான அறிக்கையினை இக்குழு சமர்ப்பிக்குமென குணவர்த்தன மேலும் கூறியுள்ளார்.

### - வவுனியாப் பகுதியில் -

# சாரதியைத் தாக்கிவிட்டு முச்சக்கர வண்டி கடத்தல்

வாடகைக்கு அமர்த்திய முச்சக்கர வண்டி ஒன்றை கடத்திச் சென்று சாரதியைத் தாக்கிவிட்டு வண்டியை அபகரித்துச் சென்ற குழுவினருக்கும் சிறிலங்காப் பொலிசார் ஒருவருக்கும் தொடர்புபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவருடன் மேலும் மூவர் கைக்குண்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த வியாழனன்று வவுனியாவிலிருந்து கெப்பிற்றி கொல்லாவைக்கு செல்லவேண்டும் எனக் கூறி முச்சக்கரவண்டியில் ஏறியிருக்கிறார். பயணத்தின் இடையில் சாரதியை கழுத்தில் வெட்டிவிட்டு முச்சக்கர வண்டியைக் கடத்த முயன்றுள்ளார். எனினும் சாரதி அக்குழுவிடம் இருந்து தப்பிச் சென்று பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

துட்டுவெவப்பொலிசார் சம்பவ இடம் நோக்கி விரைந்துள்ளனர். எனினும் சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

## துவிச்சக்கர வண்டி உரிமத்தகடு பெறல்

பூநகரிப் பிரதேச சபைக்குட்பட்ட அனைவரும் துவிச்சக்கர வண்டிக்கான உரிமத்தகடுகளைப் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேசசபை உதவியாளையாளர் கேட்டுக் கொள்கின்றார். (34)

### - நான்காவது டெஸ்ட் போட்டி -

# பின்வரிசை வீரர்கள் அபார துடுப்பாட்டம் தென்னாபிரிக்க அணி ஸ்திரநிலையில்

இங்கிலாந்துக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இடையே லீட்ஸ் விளையாட்டரங்கில் நடைபெறும் நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவின்போது இங்கிலாந்து அணி அதன் முதல் இனிங்சில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதில் மார்க் பவுச்சர் 77 ஓட்டங்களையும் ரெஸ்கொத்திக் 59 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

கடந்த வியாழனன்று ஆரம்பமான இப்போட்டியில் முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி அதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 342 ஓட்டங்களைப் பெற்றது.

கிர்க்கிறிஸ்ரன் நீண்டநேரம் துடுப்பெடுத்தாடி 130 ஓட்டங்களைப் பெற்றதுடன் 8ஆவது விக்கெட்டில் கடைநிலை ஆட்டக்காரர் எம். சொன்றகியுடன் இணைந்து 150 ஓட்டங்களைப் பகிர்ந்து தென்னாபிரிக்காவை ஸ்திரநிலைக்கு இட்டுச்சென்றார்.


2000/2001 கிரிக்கெட் பருவ காலத்தில் செஞ்சூரியனில் நடைபெற்ற சிறிலங்காவிற்கு எதிராக டெஸ்ட் போட்டியில் நீல்மக்கன்சியும் சோன் பொல்லக்கும் எட்டாவது விக்கெட்டில் பகிர்ந்த 150 ஓட்டம் என்ற சாதனையை இவர்கள் இருவரும் சமப்படுத்தினர்.

# அமெரிக்க வீரர் பீற்சாம்பிரஸ் போட்டிகளிலிருந்து ஓய்வு

டென்னிஸ் போட்டிகளில் சாதனைகள் பல புரிந்த அமெரிக்க வீரர் பீற்சாம்பிரஸ் தான் டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக வரும் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளார்.

அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நாளை அங்கு இடம்பெறும் சிறப்பு விழாவில் சாம்பிரஸ் தனது ஓய்வை அறிவிக்கவுள்ளார்.

உலக டென்னிஸ் வீரர்களின் பட்டியலில் முன்னர் முதலாவது இடத்தில் இருந்த 32 வயதாகும் சாம்பிரஸ் 14 கிராண்ஸ்லாம் வெற்றிக்கிண்ணங்களை தனதாக்கிக் கொண்ட சாதனையாளர்.



# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவருடன் பேச முடிவு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் அமைப்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவருடன் பேசுவதற்கு அமைச்சர்கள் பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோர் திட்டமிட்டுள்ளனர்.

அரசினால் தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான, நகல் சட்ட ஆலோசனை குறித்து ஏற்கனவே சனாதிபதிக்கு பிரதமர் விளக்கமளித்துள்ளார்.

இதேவேளை எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், எதிர்க்கட்சித் தலைவருடனான அமைச்சர்களின் சந்திப்பு அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் பாரிஸ் மாநாடு முடிந்த பின்னர் சமர்ப்பிக்கும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான நகலில் சாதகமான பதில் கிடைக்கப் பெற்றதும், ஏனைய அமைச்சர்களுடனும் சந்திப்பு ஒன்றை இவ்விரு அமைச்சர்களும் நடாத்துவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## கண்ணிவெடி அகற்றல்

வவுனியா மாவட்டத்தின் பல கிராமங்களில் எவ்.எஸ்.டி என்னும் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தால் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 38 கிராமங்களில் வெடிபொருட்கள் இருப்பதாக இந்நிறுவனம் இனங்கண்டுள்ளது. இவற்றில் ஓமந்தை, அரசமுறிப்பு, வேப்பங்குளம் ஆகிய பகுதிகளினை உள்ளடக்கிய 11,929 மீற்றர் பகுதியில் வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. இதில் 178 வெடிக்காத எறிகணைகள், 28 மிதி வெடிகள் உட்பட பல வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஓமந்தை மத்திய கல்லூரி, ஓமந்தை வைத்தியசாலை என்பவற்றில் உள்ளவெடிபொருட்கள் முற்றாக அகற்றப்பட்டுள்ளன. (10)

## தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு கிளிநொச்சியில் வரவேற்பு

(அலுவலக செய்தியாளர்)

தாயகத்தில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று பல வெற்றிகளைப் பெற்ற தமிழீழ வலைப்பந்தாட்ட அணியினருக்கு கிளிநொச்சியில் வைத்து பெரும் வரவேற்பளிக்கப்படவுள்ளதாகத் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்துள்ளார்.

தாயகத்தில் இருந்து முதல் தடவையாக வெளிநாடுகளுக்குச் சென்று பல போட்டிகளில் பங்கு பற்றி பெரும் வெற்றிகளைப் பெற்றுள்ள விளையாட்டு வீரர்களை, அவர்கள் கிளிநொச்சிக்கு திரும்புகின்ற எதிர்வரும் 30ஆம் திகதி கிளிநொச்சி நகரப் பகுதியில் வைத்து பாண்ட் வாத்திய இசை முழங்க ஊர்வலமாக கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துச்சென்று அங்கு பெரும் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது லண்டனில் தங்கியிருக்கும் இக்குழுவினர் எதிர்வரும் 28ஆம் திகதி அங்கிருந்து புறப்பட்டு கொழும்பை வந்தடைந்து, கொழும்பில் இருந்து 30ஆம் திகதி கிளிநொச்சியை வந்தடைவர். இவ்வாறு கிளிநொச்சிக்குவருகைதரும் வேளையிலேயே இவர்களுக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்படவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (லோ)

## மாங்குளம் எரிபொருள் நிலையத்தில் உந்துருளியில் தீப்பற்றியது

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் மல்லாவியில் இருந்து வந்த நபர் தனது உந்துருளிக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து எரிபொருளை நிரப்பிய பின்னர் உந்துருளியை இயக்க முற்பட்ட வேளை திடீரென உந்துருளி தீப்பற்றியது.

தொடர்ந்து அருகில் நின்ற மக்களாலும் நிலையத்தைச் சேர்ந்தவர்களாலும் தீயணைப்பு கருவிகளினால் தீயணைக்கப்பட்டமையினால் எரிபொருள் நிரப்பு நிலையம் பாதுகாக்கப்பட்டது. இவ்விபத்து ஏற்பட ஓட்டுனரின் கவனயீனமே காரணமென மக்கள் தெரிவித்தனர். (05)

## நாகர்கோவில் ராஜன் நகரில் மூன்று மினிமுகாம்கள் அமைப்பு

நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த ராஜன்நகர் கொட்டோடைப் பகுதியில் சிறிலங்கா இராணுத்தினர் புதிதாக மூன்று மினிமுகாமை அமைத்துள்ளதாகத் தெரிய வருகின்றது. இவ்வாறு இப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள புதிய மினி முகாங்களில் 524 ஆம் பிரிகேட்டைச் சேர்ந்த சுமார் 1000 வரையிலான படையினர் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் இப்பகுதிகளுக்கு அண்மையிலுள்ள காட்டுக்கு விறகுக்காகச் செல்லும் மக்களுக்குத் தடை விதித்து அப்பகுதிகளுக்கு விறகிற்கு வரக்கூடாது என்றும் அச்சுறுத்தியுமுள்ளனர்.

மேற்படி முகாமமைக்கப்பட்ட அந்த அரச காணிகளில் அடிப்படை வசதிகள் அற்று வாழும் 80 குழும்பங்களை மீளக் குடியமர்த்த யாழ். அரச அதிபர் பத்மநாதனால் எடுக்கப்பட்ட முயற்சி சிறிலங்காப் படையினரால் நிராகரிக்கப்பட்டது. ஆனால் அதே காணிப் பகுதியிலேயே இந்தப் படைமுகாங்கள் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (33)

## பெயரளவில் மட்டும் இயங்கும் அமைப்பாக கூட்டுறவு அமைச்சு விளங்குகின்றது

### -எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கூட்டுறவு அமைச்சு பெயரளவில் மாத்திரம் இயங்கும் ஓர் அமைப்பாக இன்று மாறியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமைக்கு நாட்டிலுள்ள அனைவருமே பொறுப்பாளிகள் ஆவர்.

1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டில் மிகவும் வெற்றிகரமான ஒரு அமைப்பாக இருந்து வந்தது. வறிய மக்களுக்குப் பெரும் சேவையாற்றி வந்த கூட்டுறவு இயக்கம் இன்று அனைவரதும் ஏமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளது என்று நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் கூறினார்.

கூட்டுறவு இயக்கத்தைக் காப்பாற்றுவதற்கு எடுக்கப்பட வேண்டிய மிக முக்கிய நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரைப் பதவியிலிருந்து விலக்குவதே ஆகும்.

கூட்டுறவு இயக்கம் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்றதாக அதனைக் கட்டியெழுப்புவதற்கு நாட்டிலுள்ள அனைவரும் அணிதிரள வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## பொலிஸ் பாதுகாப்பிலுள்ளோரின் மனித உரிமைகள் மீறல்

### -ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

பொலிஸ் பாதுகாப்பிலுள்ளவர்களின் மனித உரிமைகள் மீறப்படுவதற்குப் பொலிசாரே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தங்களால் கைது செய்யப்படும் நபர்களைப் பொலிசார் கொடுமையாக நடத்துகிறார்கள் என்று இவ் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இத்தகைய சம்பவங்களால் பொது மக்கள் பொலிசார் மீது நம்பிக்கை இழந்துள்ளதாகவும் அண்மையில் சில சிறைக் கைதிகள் சித்திரவதைக்கு உள்ளாகிய பின்னர் ஊனமடைந்துள்ளார்கள் என்றும், தேசிய பொலிஸ் ஆணைக்குழு அதன் கடமைகளை உரிய முறையில் செய்யத் தவறிவிட்டது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் 4 மருத்துவ அதிகாரிகளே உள்ளனர்

கிளிநொச்சி மாவட்டத்தில் வதியும் ஒரு இலட்சத்து முப்பத்தொன்பதினாயிரம் மக்களுக்குக் கிளி. மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் நான்கு மருத்துவ அதிகாரிகளே பணிபுரிந்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்துக் கிளிநொச்சி மாவட்டப் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தியுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்,

கடந்த 20 வருடங்களுக்கு முன்பாக சுகாதார திணைக்களத்தினால் மேற்படி மாவட்டத்தில் 13 மருத்துவ அதிகாரிகள் சேவை புரிவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தும்மேற்படி வெற்றிடம் பூர்த்தி செய்யப்படாது தற்போது நாலு மருத்துவ அதிகாரிகளே இம்மாவட்ட வைத்தியசாலைகளில் கடமை புரிந்து வருகின்றனரெனவும்,

2001 ஆம் ஆண்டு இலங்கை சுகாதாரத் திணைக்களத்தின் புள்ளி விபரங்களின் பிரகாரம் 2233 மக்களுக்கு ஒரு மருத்துவ அதிகாரி என்ற விகிதத்தில் பணியாற்ற வேண்டும்.

அந்த வகையில் கிளி. மாவட்டத்தில் 1,39,000, மக்களுக்கு 62 மருத்துவ அதிகாரிகள் பணிபுரிய வேண்டிய நிலையில் தற்போதும் 4 மருத்துவ அதிகாரிகளே பணியாற்றி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். (சோ)

### சமாதான...

கருத்தரங்கை பிரதமர் ரணிலின் உத்தரவிற்கிணங்க அரசியல் யாப்பு விவகார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

மேலும் இத்தகைய கருத்தரங்குகள் நடைபெறவுள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெவித்தன.

### பொது...

குடியிருக்க பணிக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வந்தாறுமூலை உப்போடை வீதியில் நிற்கும் படையினர் பொதுமக்களின் அடையாள அட்டைகளைப் பதிவு செய்த பின்னரே வயற் பிரதேசத்திற்குச் செல்வதற்கு அனுமதிப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது இப்பிரதேசத்தில் சிறுபோக விவசாய அறுவடை வேலைகள் நடைபெறுவதால் அதிகளவிலான மக்கள் போக்குவரத்துச் செய்கின்றனர். படையினரின் புதிய நடைமுறையினால் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டதற்குமாறாக இவ்விடத்தில் சோதனைச்சாவடி அமைத்து இவ்வாறு அடையாள அட்டைகளைப் பதிவு செய்வது அவ்வுடன் படிக்கையை மீறும் செயலாகும் எனவும் மக்கள் சுட்டிக் காட்டி யுள்ளனர்.

## உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செய்ய அரசு திட்டம்

உல்லாசப் பிரயாணத்துறையை அபிவிருத்தி செய்வதற்காகப் புதிய விமான சேவைகளை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது. மத்திய பிராந்திய அபிவிருத்தி அமைச்சும்,சிறிலங்கா விமான நிலைய சேவைகளும் இப்பணியை மேற்கொள்ளவிருக்கின்றன.

திருகோணமலை,மட்டக்களப்பு, பொல்கொல்ல,கந்தமை, நுவரெலியா,பெந்தோட்ட ஆகிய இடங்களுக்குப் புதிய விமான சேவைகளை ஆரம்பிக்கலாம் என்று இதற்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

09 பிரயாணிகள் பயணம் செய்யக்கூடிய சிறிய விமானங்கள் இந்த உள்ளூர் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளன.

## வடமத்திய மா.ஆளுனராக ஜெகத் பாலசூரிய நியமனம்

வடமத்திய மாகாண ஆளுநராக டாக்டர் ஜெகத் பாலசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். கேகாலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் வீடமைப்பு நிர்மாணத்துறை பிரதி அமைச்சருமாக இருந்த பி.பி. பாலசூரியவின் மகனான இவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். பொதுசன ஐக்கிய முன்னணியின் கட்டுப்பாட்டிலுள்ள இம்மாகாணசபைக்கு இதுவரை காலமும் ஆளுநராகவிருந்த ஜி.எம்.எஸ். சமரவீர ஓய்வுபெற்றதையடுத்து பாலசூரிய இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

### எமது ....

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பதிலளித்தார்.

இடைக்கால நிர்வாக திட்ட வரைவிற்கான பதில் வரைவு பற்றி ஆராயும் இந்தக் குழுவில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் பல சட்ட வல்லுநர்களும், சட்டத்துறை நிபுணர்களும் அடங்கியுள்ளனர்.

மூத்த தளபதி கேணல் கருணா, விடுதலைப்புலிகளின் சட்டத்துறை ஆலோசகர் உருத்திரகுமார், விடுதலைப்புலிகளின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன், சிரான் அமைப்பின் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், சமாதான செயலக இணைப்பாளர் புலித்தேவன் மற்றும் இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி, அவுஸ்திரேலிய பல்கலைக்கழக சட்டத்துறை பேராசிரியர் மனுவல்பிள்ளை போல் டொமினிக், சிங்கப்பூர் சட்டநிபுணர் பேராசிரியர் சொர்ணராஜா, மலேசிய சட்டத்துறை பேராசிரியர் இராமசாமி, சென்னையைச் சேர்ந்த சட்ட ஆலோசகர் புஸ்பேந்திரன் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

அத்துடன் கடந்த பேச்சு வார்த்தைகள் சிலவற்றில் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கிய கனடாவைச் சேர்ந்த சமஷ்டி அமைப்பு தொடர்பான ஆலோசனைக் குழுவும் தமது ஆலோசனைகளை இதில் முன்வைக்கவுள்ளது.

## இருவர் நியமனம்

(மட்டக்களப்பு)

கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பு விவகாரங்களைக் கைப்பேற்பதற்காக மேலதிக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்திற்கு எம்.லாபீர், கல்முனை பிரதேசத்திற்காக எம்.எச். சிறாப்தீன் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

### இரவு...

டுள்ளது. இதன் போதே இந்த 57 பேரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த நடவடிக்கைகளின் போது 76 சாலைத் தடைகளும் ஏற்படுத்தப்பட்டு விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## சாவு அறிவித்தல்

### செல்வி.இராசரத்தினம் கேதீஸ்வரி

[காப்பாளர், கருணா நிலையம்]

அவர்கள் 23.08.2003 அன்று அகால மரணமடைந்தார். அன்னார் இராசரத்தினம் – சற்குணம் தம்பதியினரின் அன்பு மகளும், ஸ்ரீபன் ரஞ்சித்தின் (வவுனியா வளாக 3ஆம் வருட மாணவன்) அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல்24–08–2003 (இன்று) காலை 10 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து தருமபுரம் பரிலூக்கா ஆலய சபை மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 4.00 மணிக்கு பரிலூக்கா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

கருணா நிலையம்,
கிளிநொச்சி. (கி-8260) தாய், தந்தை,தம்பி,உறவினர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.